# காற்றுவெளி

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் – 2020



# காற்றுவெளி

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் – 2020


ஆசிரியர்

சோபா

வடிவமைப்பு

நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப

R.Mahendran,

34 Redriffe Road, Plaistow, London, e13 0JX, UK

மின்னஞ்சல்

Mullaiamuthan16@gmail.com

நன்றி

இணையம், ஜவாத் மரைக்கார்



படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

# வணக்கம்,

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழுடன் சந்திக்கிறோம்.

எதிர்பாராதவண்ணம் படைப்புக்கள் கிடைத்தமை மகிழ்வைத் தருகிறது. காற்றுவெளியின் பயணம் பல வருடங்களைக்கடந்து வந்துள்ளது என்பதை நினைவுபடுத்திப் பார்க்கையில் இலக்கியவரலாற்றின் நமது பங்களிப்பு என்ன என்கிற கேள்வியும் கூட எழுகிறது.

உள்ளிருக்கை,சுயதனிமைப்படுத்தல் எல்லாம் ஆகி வெளிவரும் போதும் முகமூடி அணிந்துவரச்சொல்கிறது கொறோனா.காற்றுவெளியும் அப்படியே தனிமைப்பட்டுவிடலாம் என்று சொன்னவர்கள் மத்தியில் தொடர்ந்து விளம்பரங்கள் ஏதுமின்றி இருபது வருடங்களைத் தாண்டி வருகின்றமை அனைத்துப் படைப்பாளர்களின் ஒத்துழைப்பே எனச் சொன்னால் மிகையில்லை.

ஒவ்வொருவருக்கான அரசியல் சிந்தனை வெவ்வேறானவைதான். கொள்கையிலும் முரண்பாடுகள் இருக்கலாம்.ஆனாலும் காற்றுவெளி நட்புடன் பயணிக்கவே விரும்புகிறது.பயணித்தும் வந்திருக்கிறது.இது தொடரும்.

காற்றுவெளி தொடரும் இதழ்களை சிறுகதைச் சிறப்பிதழ், சிற்றிதழ்ச் சிறப்பிதழ்களைக் கொண்டுவரும். வடிவமைப்பில் சிலசமயம் பக்கங்களைக் கருத்தில் கொண்டு படைப்புக்களை இணைக்கமுடியாமல் போகலாம்.எனவே படைப்பாளர்கள் பொறுத்தருள்க.

சந்தா பற்றிக் கேட்கிறார்கள்.இதுவரை நமக்குக் கிடைத்த அனுபவங்கள் தீர்மானங்களை எடுப்பதில் அவநம்பிக்கைகளே எஞ்சி நின்றதால் அவர்களுக்கான சரியான பதில் தரப்படவில்லை.எதிர்காலத்தில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்படலாம்.அப்போது சந்தா,விளம்பரங்கள் பற்றிய அறிவித்தல் வரும்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

நட்புடன்,

சோபா.

மூலம் : நஸீம் ஹிக்மத் (துருக்கி)
தமிழில் : பெரி. சண்முகநாதன்

# அழுகை

ஆடியெனப் பளபளக்கும் அமைதியான நீர்ப்பரப்பில்
வீழ்ந்தாங்கு தழுவுகின்ற ' விலோ ' மரத்து விழுதுகளால்
சலனமுறா நதியதுவோ சாந்தமுடன் பாய்கிறது.
காட்டுமரக் கிளைகள்தம்மைக் கத்திகளால் சீவிக்கொண்டு
கருக்கற்பொழுதினூடு செம்பரிப் படையதுவு.. செல்கிறது.

சடுதியென,
புண்பட்ட பறவையொன்று பூமிநோக்கி வீழ்த்தல்போல்
நிலைகுலைந்து ஒருவீரன் நிலமதில் வீழுகிறான்.
அனுங்கலென் றொன்றில்லை ; அழுகையென் றொன்றில்லை ;
தனைவிட்டுத் தாவியேகும் தன்நண்பர் தமையழைக்கும்
ஆர்ப்பரிப்பும் ஆங்கில்லை.
குழம்படிகள் தொலைவில் மின்னக் குதிரைகள் மறைவதனைக்
கண்ணில் தழும்புநீருடன் துணையின்றித் தனியனவன்
காட்சி கொண்டான்.

நிராசை! நிராசை!
வீசுகின்ற வாளெடுத்து வெண்காவ லரைவிரட்ட
பாயுகின்ற அந்தப்போர்ப் பரிமீதில் இனியவன் ஏறான்.
குழம்பொலி முழக்கமது குன்றிமங்கி மடிகிறது.
சூரியா ஸ்த்தமனம் சூழுகின்ற திசையதனில்
வீரரவர் விரைந்து மறைகின்றனர்.
செம்பரிப் படைவீரர் செம்பரிதி யனைப்பரிகள்
செம்பரிகள்.. பரிகள்.. பரி..



*பாய்ந்தோடி மறைந்தவப் பரிப்படைபோல் அவர்க்கு*
*வாய்த்தவவ் வாழ்வதும் வழிதவறிப் போனது காண்.*
*மெதுவாக முணுமுணுத்த நதியதுவும் ஈற்றாங்கில்*
*சத்தமின்றி மோதுதுகாண்.*
*நாளது அடும்போதில் நிறம்நாணி வெளுக்கிறது ;*
*நீலமணி விழிகள்மேல் நீசவிருட்திரை வீழ்கிறது.*
*' விலோ ம் மரமோ இலையுதிர்த்து விழிநீர் சொரிகிறது.*
*அழாதே, விலோ மரமே! ஓ! அழகான விலோ மரமே!*
*ஆழநீர்ப் பரப்பிலுந்தன் முகம்காட்டி, கைகாட்டி*
*அழாதே, விலோ மரமே!*
*அழாதே, ஓ! அழாதே!*



# கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா?

இந்த கேள்வி பல காலமாக கேட்கபடும் கேள்வி தான். கொரோனா காலத்தில்இப்படி ஒரு கேள்வி தேவையும் கூட.

இந்த கேள்வியை யாரிடம் கேட்பது அரசியல் வாதியிடமா? ஆன்மீகவாதியிடமா?. இல்லை உலகின் தலைசிறந்த விஞ்ஞானியிடமே கேட்கப்பட வேண்டும்.

இந்த கேள்விக்கு மட்டுமல்ல இது போன்ற மனித மனதை துரத்துகின்ற பல கேள்விகளுக்கு பதில் அளித்திருக்கிறார் "ஸ்டிபன் ஹாக்கிங்"

இந்த பெயரை கேட்டதுமே.. ஒரு தானியங்கி வில் சேர்,ஒடுங்கிப்போன முகம்,குறுகிய கண்கள் என்ற உருவம் தோன்றும். அந்ததோற்றத்தை பார்த்ததும் பரிதாபம் ஏற்படுவதை விட எப்படி முடிகிறது இந்த மனிதரால் என ஆச்சரியமே தோன்றும்.கொரோனா தொற்றுக்கே முடங்கிபோன இந்த உலகத்தில் இவர் ஒரு அதிசயமே.தன் 21 வயதிலிருந்து 76 வயது வரை வில் சேரில் அமர்ந்தபடியே பிரபஞ் சத்தை சுற்றிவந்தவர்.

' BRIEF ANSWERS TO THE BIG QUESTIONS 'என்ற இவரின் ஆங்கில நூல் தமிழில் "ஆழமான கேள்விகள் அறிவார்ந்த பதில்கள்"- என்ற தலைப்பில் psv.குமாரசாமியின் மொழிபெயர்பில் "மஞ்சுள் பபிளிஷிங் ஹவுஸ்" வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைகழக தேவாலயமான கிரேட் செயின்ட் மேரி தேவாலயத்தில் நடைபெற்ற ஹாக்கிங்கின் இறுதி ஊர்வலத்தின் வர்ணிப்போடு துவங்குகிறது இந்நூல்.இந்நூலின் சிறப்புரையில் அவரது மகளான லூசிஹாக்கிங்கின் தனது தந்தையின் கடைசிகால திட்டங்களில்ஒன்று இந்நூல் என்கிறார்.அவர் உயிரோடு இருந்தபோது துவங்கி அவரது மறைவுக்கு பின் வெளிவந்த நூல் இது.

10 ஆழமான கேள்விகளும் அதற்கு ஸ்டிபன்ஹாக்கிங்கின் அறிவார்ந்த பதில்களும் உள்ளன.

1. கடவுள் என்ற ஒருவர் இருக்கிறாரா?
2. பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது?
3. அறிவார்ந்த வேறு உயிரினங்கள் பிரபஞ்சத்தில் இருக்கின்றனவா?
4. வருங்காலத்தை நம்மால் கணிக்க முடியுமா?

5. “ஒரு கருந்துளைக்கு...?” உள்ளே என்ன இருக்கிறது?

6. காலப்பயணம் சாத்தியம் தானா?

7. வருங்காலத்தில் நாம் இந்த பூமியில் உயிர்பிழைத்திருப்போமா?

8. விண்வெளியை நாம் காலணிப்படுத்த வேண்டுமா?

9. செயற்கை நுண்ணறிவு நம்மை விஞ்சிவிடுமா?

10. வருங்காலத்தை நாம் எவ்வாறு வடிவமைப்பது?

இந்த கேள்விகளில் ஒரு கருந்துளைக்கு உள்ளே என்ன இருக்கிறது?யு போன்ற நேரடி அறிவியல் கேள்விகளை தவிர்த்து ஒரு சாராசரி மனிதனுக்கு முன் உள்ள 4 கேள்விகளுக்கு -ஸ்டிபன்ஹாக்கிங் கின் பதில்களை சுருக்கமாக உங்கள் முன் வைக்கிறேன்.

1. கடவுள் என்ற ஒருவர் இருக்கிறாரா?

2. அறிவார்ந்த வேறு உயிரினங்கள் பிரபஞ்சத்தில் இருக்கின்றனவா?

3. வருங்காலத்தில் நாம் இந்த பூமியில் உயிர்பிழைத்திருப்போமா?

4. செயற்கை நுண்ணறிவு நம்மை விஞ்சிவிடுமா?

கடவுள் மீது எந்தவிதமான

காழ்புணர்ச்சியும் கிடையாது...

தசாவதாரம் படத்தில் கமல் சொல்வதை போல “கடவுள் இல்லைன்னு எங்க சொன்னேன்.. இருந்தா நல்லாயிருக்கும் தானே சொன்னேன்” போன்ற சமாளிப்பு ஸ்டிபன்ஹாக்கிங்கின் பதிலில் இல்லை.

கடவுள் மீது எந்தவிதமான காழ்புணர்ச்சியும் கிடையாது... நம்மை சுற்றியுள்ள பிரபஞ்சத்தை புரிந்து கொள்வதற்கு ஒரு அறிவார்ந்த வழிமுறையை உருவாக்குவதே என் வேலை என்கிறார்.

என்னை போல நீங்களும் அறிவியலில் நம்பிக்கை கொண்டுள்ள ஒருவராக இருந்தால் ஒரு சில விதிகள் எப்போதும் கண்டிப்பாக செயல்பட்டு வருகின்றனஎன்பதை நீங்கள் நம்புவீர்கள். அந்த விதிகள் கடவுளின் கைங்கரியம் என்று கூற நீங்கள் முற்படக்கூடும். ஆனால் அப்படிப்பட்ட விவாதம் கடவுளைப் பற்றிய விவரிப்பே அன்றி அவருடைய இருத்தலுக்கான நீருபணம் அல்ல. என்கிறார்... ஹாக்கிங்..

சூரியனின் ஈர்ப்பு விசையால் பூமி உள்ளிட்ட கிரகணங்கள் அதற்கான பாதையில் அதனை சுற்றி வருவது இயற்கை விதி.நம்மை சுற்றி யுள்ள பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ள நட்சத்திர கொத்துகள், கேலக்சிகள்,கருந்துளைகள்,வெடிக்கும்

நட்சத்திரங்கள்..இவையெல்லாம் இயங்க விதிகள் செயல்படுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கிற போது கடவுள் என்ற ஒருவர் இருக்கிறாரா? என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

**வேற்றுகிரகவாசிகள் இருக்கிறார்களா...**

"நாம் வாழும் சூரிய மண்டலத்தில் செவ்வாய் கிரகம் உள்ளிட்ட எதிலும் உயிரினங்கள் இல்லை.நம்மை சுற்றியுள்ள பிரபஞ்சத்திலும் யோரவது துணைக்கி இருக்கீங்களா" என கேட்டு கொண்டே இருக்கிறோம். இது வரை பதில் இல்லை.

பூமிக்கு வெளியே அறிவார்ந்த வேறு உயிரினங்கள் பிரபஞ்சத்தில் இருக்கின்றனவா? என்ற கேள்விக்கு...

முதலில்பூமியில்அறிவார்ந்தஉயினங்கள்இருக்கின்றனவாஎன்பதேகேள்விக்குறிதான். வேடிக்கையை தள்ளிவிட்டு பார்த்தால் வேறு எங்காவது அறிவார்ந்த உயினங்கள் இருக்குமெனில் அவை மிகவும் தொலைவில் இருக்கவேண்டும். இல்லையெனில் அவை இதற்குள் பூமிக்கு வருகை தந்திருக்கும். அவை பூமிக்கு வந்திருந்தால் அவற்றை நாம் கண்டிப்பாக அறிந்திருப்போம்.இது இன்டிபென்டன்ஸ்டே என்ற ஆங்கில படத்தில் வந்தது போல இருந்திருக்கும்.யஎன்கிறார்.

நாம் கூடுதல் வளர்ச்சி அடையும் வரை வேற்றுகிரகவாசிகளிடம் இருந்து வரக்கூடிய பதில் களை படிக்காமல் இருப்பது நல்லது என்கிறார் ஹாக்கிங்ஸ்.

**வருங்காலத்தில் நாம் இந்த பூமியில் உயிர்பிழைத்திருப்போமா?**

வருங்காலத்தில் என்ன இப்போது நம் நிலைமை அது தானே. 1 கோடிக்கு அதிகமான மனிதர்களை தொற்றிக்கொண்டுள்ளது கொரோனா.பலரை உயிர்பலி வாங்கி வருகிறது.இந்த நிலை எப்போது மாறும்.கொரோனா முற்றிலும் எப்போது முடிவுக்கு வரும், மருந்து எப்போது கண்டுபிடிக்கப்படும்.இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு கொரோனாவோடு போராட வேண்டும்.வேறு எதேனும் கொடிய வைரஸ் கள் வந்துவிடுமா.. மனித குலத்தின் வருங்காலம் எப்படி இருக்கும்?இது போன்ற கேள்விகள் தற்போதைய சுழ்நிலையில் கேட்கபடுகிறது.

"அரசியல் ரீதியாக... நிலைகுலைந்திருக்கும் உலகம், தீர்க்கமான முடிவெடுக்காத உலக தலைவர்கள்,கொள்ளை லாபத்திற்காக.. இயற்கை வளங்களை அழித்துவரும் பணக்காரர்கள். உலகை பல முறை அழிக்கும் வல்லமை பெற்ற அணுகுண்டுகள் வைத்திருக்கும் வல்லரசுகள்,மனிதர்களின் செயல்பாடுகளால் மாறிவரும் பருவகாலங்கள், இவையே மனிதர்கள் இந்த பூமியை அழிக்கப்போதுமானது.." என்கிறார் ஹாக்கிங்ஸ்.

பூமிக்கு இருக்கின்ற அச்சுறுத்தலிலேயே மிகபெரியது எது? என்ற கேள்விக்கு

சிறுகோள் மோதலைத்தான் குறிப்பிடுவேன்.எனெனில் அதிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள வழியேயில்லை.கடந்த முறை அப்படி நடைபெற்ற மிகப்பெரிய மோதல் 6.5 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்தது.அது அப்போது பூமியில் வாழ்ந்த டைனோசர்களைபூண்டோடு அழித்துவிட்டது. இயற்பியல்விதிகளும்,நிகழ்தகவல்களும் அப்படி பட்ட மோதல் மீண்டும் நிகழும் என்கிறார் ஹாக்கிங்ஸ்..நாம் காத்திப்போம்.

## கைபேசியும்,கணிணியும் நம்மை விஞ்சிவிடுமா?

என்னை கேட்டால் விஞ்சிவிட்டது என்பேன். தற்போதைய தலைமுறை கூகுள் *(goole)* தலைமுறை. எதை கேட்டாலும் கூகுளில் தேட துவங்கிவிடுகிறது.மிக எளிய கணக்குகளுக்கு கூட காலகுலேட்டர் தேவைபடுகிறது.கணிணி,கேபேசி, சாதனங்கள் இல்லாமல் இந்த உலகம் இனி ஒருநிமிடம் கூட இயங்க இயலாது.

ஹாக்கிங் என்ன சொல்கிறார் தெரியுமா..

அறிவியல் அறிஞர்கள் பலர் சேர்ந்து பெரும் நுண்ணறிவு படைத்த அதி நவீன கணிணி ஒன்றை உருவாக்கினார்கள். அவர்கள் அதனிடம் கேட்ட முதல் கேள்வி “கடவுள்” என்ற ஒருவர் இருக்கிறார? என்பது தான். அதற்கு அக்கணிணி “இப்போது அவர் உருவாகிவிட்டார்” என்று பதிலளித்துவிட்டு,தன்னை யாரும் ஒருபோதும் அணைத்துவிட முடியாதபடி செய்துவிட்டது. என்கிறார்.

வளர்ச்சியடைந்து வரும் தொழில் நுட்பத்தை சரியாக பயன்படுவதிலேயே மனித குலத்தின் எதிர்காலம் இருக்கிறது.

மனிதர்களின் மண்டை ஒட்டுப்பகுதி அல்லது மூளைக்குள் மின் முணைகளை பொருத்துவதன் மூலமாக வருங்காலத்தில் தகவல் தொடர்பு மனித மூளைக்கும், கணிணிக்கும் இடையே நேரடியாக நடைபெறும் ஒன்றாக இருக்கும் என்று நம்புகிறேன் என்கிறார் ஹாக்கிங்.

234 பக்கங்கள் கொண்ட இந் நூலை மிகமிக சுருக்கமாக உங்கள் முன் வைத்திருக்கிறேன். கடவுள் நம்பிக்கை என்பது ஒரு தனிமனிதனின் சுகந்திரம். ஆனால் “ஆழமான கேள்விகள் அறிவார்ந்த பதில்கள்” என்ற இந்த நூலை படிக்கும் போது நம்மை சுற்றியுள்ள பிரபஞ்சம்,நிகழ்வுகள்,வாழ்க்கை,நம்மை கடந்து போன வரலாறுகளை அறிவயில் பார்வையோடு விளக்கியுள்ளார் ஹாக்கிங். நூலை படித்து முடிக்கின்றபோது கடைசி கேள்வியான “வருங்காலத்தை நாம் எப்படி வடிவமைப்பது?” என்ற கேள்விக்கு விடை உங்களுக்கு கிடைத்துவிடும்.

சிங்கள மூலம் : பராக்கிரம கொடிதுவக்கு

தமிழில் : எம்.எச்.எம். ஷம்ஸ்



# மாணவியும் அதிசய விளக்கும்

விழி மூடும் ராப்பொழுதில்
விழித்திருந்த உன் கரத்தில்
விரிந்ததொரு புத்தகம்.


மணி பத்து ஆயிற்றென்றால்
விளக்கணைத்தல் விடுதியிலே விதி ;
ஆனால் உன் புத்தகத்தில்
ராக்குமிழோ ஒளி உமிழ
நூற் பரப்பில் நீ மிதந்தாய்.

தூரத்துத் தாரகைகள்
தூக்க வெறி விஞ்சியதால்
ஒவ்வொன்றாய் அணைந்துவிடும்.

எங்கிருந்தோ ம் பிரித் ம் ஒலியின்
ஸ்வரங்கள் மிதந்து வர,
வெண்மலரால் உடல் வருடும்!
மோனத்தால் உளம் சிலிர்க்கும்!

ஆனாலும் -
ஏடு தந்த வழிகளிலே
நீ தொடர்ந்தாய்!

போராட்டம், புரட்சிக்காய்
மனிதன் விழித்திருந்ததுண்டு!
மங்கையென முகிழ்த்திடுதல்
மணநாளில் அல்ல ; கண்ணே!
மானுடத்தின் வரலாற்றை
இன்றிரவு நீ படித்து,
நாளைவரும் காலையிலே
நம்மிடையே வருவாயே அன்று!




# இழந்த கையெழுத்துப் பிரதி
# மொழிபெயர்ப்பு நூல் - அறிமுகம்

*"language is different but literature is one"* என்று ஆங்கிலத்தில் ஒரு வாசகம் உண்டு. எந்த மொழியிலுள்ள இலக்கியமானாலும் அவை உலகலாவிய இலக்கிய பொதுமையுணர்வை தன்னளவில் வெளிப்படுத்துகின்றன என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. அப்பொதுமை உணர்வே வாசக மனதை எம்மொழி இலக்கியத்தோடும் இயைபுறச் செய்கிறது. வேறுபட்ட மொழி இலக்கிய கலாச்சாரச் சூழலையுடைய படைப்பாளனையும் வாசகனையும் ஒரு புள்ளியில் இணைக்கும் இலக்கியப் பாலமாக மொழிபெயர்ப்பாளர் செயல்படுகிறார்.

எந்த மொழியிலிருந்தும் எந்த மொழிக்கும் எந்த ஒன்றையும் முழுமையாக, அதன் இயல்பும் தனித்தன்மையும் சிறிதுகூட பிசகாமல் மொழிபெயர்த்துவிட முடியாது என்பதே உண்மை. மொழிபெயர்ப்பு பற்றி மெக்சிகோ நாட்டு கவிஞர் ஆக்டேவியாபாஸ் கீழ்கண்டவாறு எழுதுகிறார்.

"ஒவ்வொரு வாசகமும் தனித்துவமானது, அதே நேரத்தில் அது வேறொரு வாசகத்தின் மொழிபெயர்ப்புமாகும். எந்த வாசகமும் முழுக்க முழுக்க அசலானதல்ல. ஏனெனில் மொழி என்பதே அடிப்படையில் ஒரு மொழிபெயர்ப்புதான். முதலாவதாக அது வார்த்தைகளற்ற உலகிலிருந்து மொழிபெயர்கிறது. பிறகு ஒவ்வொரு குறியீடும் ஒவ்வொரு வாக்கியமும் மற்றொரு குறியீட்டின் மற்றொரு வாக்கியத்தின் குறியீடாகும். ஓரளவிற்கு ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் ஒரு அசலான கண்டுபிடிப்பு ஆகும்". என்கிறார்.

இவ்வகையில் மொழிபெயர்ப்பு பணி என்பது ஒரு அசலான கண்டுபிடிப்பாக இருந்த போதிலும் அதனை சூழலுக்குத் தக்க வகையில் அர்த்தப்படுத்தும் செயல்பாடுதான் மொழிபெயர்ப்பாளரின் மொழிப் புலமைக்கே சவால் விடுவதாக அமைந்து விடுகிறது. இத்தகைய அரிய பணியை கவிஞர் சந்திரா மனோகரன் மேற்கொண்டிருக்கிறார்.

வாழ்க்கைச்சட்டம் பதிப்பக வெளியீடாக இழந்த கையெழுத்துப் பிரதி எனும் தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூல் அவரின் மொழிபெயர்ப்புத் திறமைக்கும் கவித்துவப் புலமைக்கும் சான்றாகத் திகழ்கிறது.

ஒரு மொழிபெயர்ப்புப் பிரதியின் வெற்றி என்பது அப்பிரதிக்கும் அதனை வாசிக்கும் வாசகனுக்குமான நெருக்கத்தைப் பொருத்தே

அமைகிறது. வாசகன் எந்த சூழலிலும் மொழிபெயர்ப்புப் பிரதியின் போதாமையை உணரச்செய்யாததாய் இருந்தாலே அது மொழிபெயர்பாளரின் வெற்றிக்குச் சான்றாகும். அவ்வகையில் இம்மொழிபெயர்ப்பு நூல் தன்னளவில் வெற்றியடைந்துள்ளது எனலாம்.

வாழ்கை ஓர் இழந்த கையெழுத்துப் பிரதி

எழுதியதாகயிருந்தாலும்

திரும்ப எழுதியதாயிருந்தாலும்

மீளப் பெறமுடியாது

இழந்போன வனப்பை..

எனும் கவிதை வாழ்க்கை குறித்த கவிஞரின் அவதானிப்பை தெளிவுபடுத்துகிறது. காலாதீதத்தில் சூழித்துக்கொண்டோடும் வாழ்வின் மீட்கவியலாத கணங்களை பற்றிய தீர்க்க தரிசனத்தை இவ்வரிகள் பதிவுசெய்கின்றன.

வேறுபாடுகள் எனும் தலைப்பில் ஒரு கவிதை,

நான் விண்ணில் பறக்கும் பட்டத்தைக் காணலாம்

நீயோ ஒரு விமானம் பறப்பதைப் பார்க்கிறாய்

இதனால் என் பார்வையில் குறையென்றில்லை

இருவரும் வேறுபட்ட காட்சிகளைக் காண்கிறோம்.

எனும் கவிதை வேறுபட்ட இரு உள்ளங்களிடையே ஆத்மார்த்தமான பிணைப்பை ஏற்படுத்த வல்லது அன்பு ஒன்றுதான் என்பதை மிக அழகாக பதிவுசெய்கிறது.

இந்நூலிலுள்ள கவிதைகளை வாசிக்கும் எவரும் பூக்கள் மொட்டவிழ்வதையும் புயலின் சீற்றம் பொங்கியெழுவதையும் ஒருங்கே அனுபவிக்கவியலும். உலக கவிஞர்களின் அழகியல் மற்றும் அரசியல் உணர்வு வெளிப்பாடுகளைத் தமிழின் அகப்புற கவித்துவ எடுத்துரைப்பியலின் உளவியல்புகளோடு பிரதிபலித்துள்ளமை இம் மொழிபெயர்ப்பின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

படைப்பு மனம் சற்றே இளைப்பாற படைப்பாளன் மொழபெயர்ப்புப் பணியில் ஈடுபடுவதுண்டு என்றோரு கருத்து பரவலாக உண்டு. ஆனால் கவிஞா் சந்திரா மனோகரன் மொழிபெயா்த்த இக்கவிதைகளில் நாம் காண்பது படைப்பு மன இளைப்பாறுதலையல்ல. அதன் குதூகலிப்பை, கொண்டாட்டத்தையே காண முடிகிறது. மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட ஒவ்வொரு கவிதையும் ஒரு புதிதான கண்டுபிடிப்பே ஆகும்.

பேர்ஸி பிஷ் ஷெல்லி
தமிழில்: வ.ந.கிரிதரன்



# காதல் தத்துவம்

ஊற்றுகள் ஆற்றுடன் கலந்துவிடும்.
ஆறுகளோ ஆழியில் கலந்துவிடும்.
சொர்க்கக் காற்று எப்போதும்
சேர்ந்தே கலந்து விடுமின் உணர்வுடனே.
இங்கு எவையும் தனித்தில்லை;
இறைவிதி வழியனைத்து மிங்கோர்
ஆன்மா ஆகியிணைந்தே கலந்துவிடும்..
அடியேனிலையே அவ்விதமுன்னுடன் ஏன்?

மலைகள் *உயர்சொர்க்கம் தழுவுதலைப் பார்!.
அலைகளும் தமக்குள் தழுவி நிற்கும்.
மலர் எதற்கும் மன்னிப்பில்லையம்
மலர் மலரை இகழ்ந்து விடின்.
கதிரொளியும் ககனம் தழுவி நிற்கும்.
மதிகிரணங்க ளாழியை முத்தமிடும்.
நீயெனை முத்தமிடவில்லை யென்றால்
நிகழுமின் செயலனைத்தின் அர்த்தமென்ன?

ஆங்கிலத்தில் : கவிஞர் பைரன் (பைரன் பிரபு)
தமிழில் : வ.ந.கிரிதரன்



# என் இனிய மேரி ஆனுக்கு

சென்றுவருகிறேன் என் இனிய மேரி, நிரந்தரமாகவே.
அவளிடமிருந்து நான் விரைவாகவே விடைபெற வேண்டும்.
எம்மிருவரையும் *விதித்தேவதைகள் பிரித்தாலும்
அவளது உருவம் என் நெஞ்சில் குடியிருக்கும்.

◎

எரியுமென் நெஞ்சின் சுவாலையானது
காதலர்களின் இதயங்களில் ஒளிர்வதைப்போன்றதல்ல.
மேரி மீது நான் கொண்டுள்ள காதலானது
காமனேற்படுத்தும் காதல் உணர்வுகளை விட
மிகவும் தூய்மையானது.

◎

உன் அமைதி சீர்குலைவதை நான் விரும்பமாட்டேன்.
உன் இன்பம் துன்புறுவதை நான் விரும்பமாட்டேன்.
என் காதல் வேட்கையினைத் தவறாக எடுக்க வேண்டாம்.
உன்னுடைய நட்பொன்றே நான் வேண்டுவது.

◎

என் நெஞ்சு கொண்டிருக்கும் நட்பினைப்
பத்தாயிரம் காதலர்கள் கூட உணரமாட்டார்கள்.
சூடான இரத்தம் என் நரம்புகளில் ஓடிக்கொண்டிருக்கும் வரையில்
இந்த நட்பு எப்பொழுதும் என் இதயத்தில் குடிகொண்டிருக்கும்.


◎

என் மேரி தீயசக்திகளிலிருந்து தன்னைப்பாதுகாக்க
சொர்க்கத்தின் அரசர் பூவுலகை நோக்கட்டும்..
அவள் ஒருபோதும் துன்பத்தின் சீற்றத்தை உணராதிருக்கட்டும்.
அவளது இன்பம் எப்பொழுதுமே முடிவற்றதாகவிருக்கட்டும்.

◎

மீண்டுமொருமுறை என் இனிய பெண்ணே, சென்றுவருகிறேன்.
விடைபெறுகிறேன் மீளும் வேதனையுடன்,
என்னுடைய மார்பிலிருக்கும் இதயத்தின் துடிப்பிருக்கும்வரை
எப்பொழுதும் உன்னை எண்ணிக்கொண்டேயிருப்பேன்.

ஆங்கிலத்திலிருந்து
தமிழில்: லதா ராமகிருஷ்ணன்



# அன்னா அக்மதோவாவின் கவிதை

## இந்த மாலைவேளையின் ஒளி பொன்னிறத் தகதகப்பாய்...

*இந்த மாலைவேளையின் ஒளி*
*பொன்னிறத் தகதகப்பாய்*
*ஏப்ரல் மாதக் குளிர் மிக இதமாய்*
*நீ பல வருடங்கள் காலதாமதமாய்*
*என்றாலும் உள்ளே வரும்படி உன்னை*
*வரவேற்கிறேன்.*
*எனக்கு அருகில் அமர்ந்துகொண்டு*
*மகிழ்ச்சி ததும்பும் கண்களால் சுற்றுமுற்றும் பாரேன்.*
*இந்தச் சிறிய நோட்டுப்புத்தகத்தில் இன்னுமிருக்கிறது*
*சிறுபிள்ளையாயிருந்தபோது எழுதிய கவிதைகள்*
*என்னை மன்னித்துவிடு*
*இத்தனைநாள் வருந்தியபடியே வாழ்ந்திருந்ததற்கு*
*சூரியக்கதிர்களுக்காக நன்றி பாராட்டாததற்கு*
*தயவு செய்து என்னை மன்னித்துவிடு*
*யார் யாரையோ நீயெனப் பிழையாக*
*எண்ணியிருந்ததற்கு.*

◎

*பொன்மாலைப்பொழுது*
*பொன்னென மின்னும்*
*இன்மாலைப்பொழுது*
*மிக இதமான ஏப்ரல் மாதக் குளிர்*
*மிகப் பல வருடங்கள் காலதாமதமாய் வந்திருக்கிறாய்*
*இருந்தும் உன்னை மனதார வரவேற்கிறேன்.*
*என்னருகில் அமர்ந்துகொண்டு ஆனந்தமாய்*
*அங்குமிங்கும் பார்க்கமாட்டாயா?*
*என் பிள்ளைப்பிராயக் கவிதைகள்*
*இன்னுமிருக்கிறது*
*இந்தச் சின்ன நோட்டுப்புத்தகத்தில்.*
*இதுகாறும் வருந்தியவாறே வாழ்ந்தமைக்கும்*
*சூரியக்கதிர்களுக்கு நன்றி பாராட்டாததற்கும்*
*மன்னித்துவிடு என்னை.*
*எவரெவரையோ நீயென்று கொண்டதற்கு*
*தயவுசெய்து மன்னித்துவிடு என்னை.*

தமிழில் : ராஜி வாஞ்சி



**பிரான்சிஸ் எலன் வாட்கின்ஸ் ஹார்பர்**

*செப்டம்பர் 24, 1825 அன்று மேரிலாந்தின் பால்டிமோர் நகரில் பிறந்தார். அவர் ஒரு முக்கிய ஒழிப்புவாதி மற்றும் நிதானம் மற்றும் பெண்கள் வாக்குரிமை ஆர்வலர், அதே போல் ஒரு கவிஞர். கவிதைத் தொகுப்புகள் வன இலைகள் (1845) மற்றும் இதர பாடங்களில் கவிதைகள் (1854) உட்பட ஏராளமான புத்தகங்களை அவர் எழுதியுள்ளார். அவர் ஓஹியோவில் உள்ள யூனியன் செமினரியில் பணிபுரிந்தார், பிப்ரவரி 22, 1911 அன்று பென்சில்வேனியாவின் பிலடெல்பியாவில் இறந்தார்.*



# தளையில்லா தரணி வேண்டும்

எனக்கான கல்லறை
பணக்கார போகமின்றி
எட்டி நிற்கும் மலையிலோ.. பரந்த
வெட்டவெளியிலோ கட்டுங்கள்..
மாந்தர்காள்! அடிமைகளின் கண்ணீரில்
நீந்தும் மண்ணில் மட்டும் கட்டி விடாதீர்கள்.

நீள் உறக்கம் பாழ்படுமே..அவன்
தாள் ஒலிகள் தடுமாறி
வீழ்ந்து பட்டு நடுக்குறும் போது.
அப்பாவி..அடிமையவன் நிழலும்
தப்புத்தாளங்கள் தட்டி.நிற்க..நீடுதுயிற்
மோனம் மலர்ந்திடுமோ ..?

குருதித் தெறிக்கும் சவுக்கொலியும்
பொருதி பொருதி காயங்கள் சுவைக்கும்
பெருவிலங்கும் கண்டு மிரண்டு
தாயை விடுத்து கசியும் பாலுடன் பதறும்
சேய்கள்.. பதுங்கும் புறாக்குஞ்சுகளாய்
கூட்டில் கிடுகிடுகிடுத்துக் கிடக்க - கல்லறைக்
காட்டில் கண்கள் அயர்ந்திடுமோ ..?

கூட்டமாய் நெருங்கும்
வேட்டைநாய்கள்...இரக்கம்
காட்டுமோ கெஞ்சிக் கதறும்
மனிதக் குரல்வளைகளுக்கு.
தேய்ந்து மறைந்து மெதுவாய் அடங்க
காய்ந்த பச்சை உதிரம் படிந்த
பிணைத்த சங்கிலியோசை உரசும் ஒலியில்
எனை நிறைவான உறக்கம் சூழ்ந்திடுமோ ..?

தாயும் மகளுமாய் தழுவிய கரங்கள் வெட்டிச் சாய்த்து
மேயும் மாடாய் மகளின் இளமை
சந்தைப் பொருளாய் மாறிடக் கேட்டு
எந்தை மக்கள் இடரினைக் கண்டு
கல்லறை வெடித்துக் கனலாய் பொங்கி
வெள்ளையாய் வெளுத்து சீவனிழந்த
கன்னமிரண்டும் காந்தளாய் சிவக்க
பெண்ணென மானமிழந்திட மாட்டேனோ ..?

தின்று பெருத்த தினவுடை வலியோர்
என்று உணர்ந்து எளியோர் உரிமையை
சென்று பறிக்காத நாளது பிறந்தால்
நன்று நிலைத்து உறங்குவேன் நானே..
உற்ற உயிரை உயர்வாய் கருதி- உடன்
பெற்ற சகோதரனாய் பேணிக்காத்து
'அடிமை' எண்ணம் அழியும் நாளில்
விடியும் நிம்மதியில் விரைந்து உறங்கிடமாட்டேனோ..?


கண்ணைக் கருத்தைக் கவரும் மண்டபம்
வேண்டேன் வேண்டேன்.... என் சிற்றுயிர்
வேண்டுவதெல்லாம் ஒன்றே ஒன்றை
மாண்பில்லா அடிமை எண்ணம் மறைந்த
மண்ணில் மகிழ்வாய் புதைத்து என்னை
மன்னிடச் செய்தல் வேண்டும் வேண்டும்..
பெண்ணிவள் பேறாய் புதைந்து மகிழ்ந்திட மாட்டேனோ?

கன்னட மூலம் : மூட்னகூடு சின்னசாமி
தமிழில் : பேரா.மலர்விழி.கே.
பா.தென்றல்

# புத்தி

புத்தியின் பிறப்பிடம்
நிர்வாணம்
ஞானத் துகில்
மறைக்கிறது
மானத்தை

தூய ஆடை
அணிவது போல்
பண்பாடு
அன்றேல் அது சீர்கேடு



◎

# நிராசை

குளிர் காலத்துப்
பனி மூடிய குன்றுகளைப் போல்
உறைந்தவாறு
சுதந்திரமாக விளையும் என்னுள்
வெள்ளிக் கனவுகள்

சுட்டெரிக்கும் வெயிலுக்கு
மிரண்டு
கரைந்தவாறு
கடலை நோக்கிப் பாய்கின்ற
நதிகளைப் போல்
நிராசைக்கடலில் சேர்ந்து போகின்றன.

◎

# காலணியும் நானும்

நான் கோவிலுக்குச் சென்ற போது
வெளியில் விடுவதில்லை
காலணியை
நானே வெளியில் இருப்பேன்

செருப்புத் தைப்பவனின் கால்களில்
காலணியைப் பார்த்த
வேளையில் மனிதன்
நாயைக் கடித்தது போல் பரவுகிறது செய்தி

காலணிகளைக் கழட்டிய கால்கள் அனைத்தும்
என் மீது
நடப்பதாகவே தெரிகிறது.

நான் ஒரு செடி
அது என் அடிப்பாகம் என்பது
அவர்களுக்குத் தெரிவதேயில்லை

வறண்ட ஏரியின்
நீர் இருக்கும் பள்ளத்தில்
கழுத்தை நீட்டும் கொக்கு போல்
நான்
முன்னங்கால் விரல் நுனிகளில் நின்று
எட்டிக் கடவுளின் உருவத்தைப்
பார்வையில் தெரியுமளவு திருடிக் கொள்கிறேன்.

நூற்றுக்கணக்கான தலைகளின் இடையில்

மின்னுகின்ற மகுடமணி மிருதுவான படுக்கை
வளர்ந்து குடையாடும் பாம்பு (ஸர்ப்பம்)
ஒரு முறை
வைரம்பதித்த கிரீடம் கழுத்தில் ஆரம்
முப்பிரி நூல் தீபாராதனை செய்து மணி அடிக்கும் போது
காலடியில் தேகல் காலணிகள் சூடேறிய
இரும்பு போல
பூமி உள்வாங்குவது
போல் ஆகிறது இந்த
ஈரமான உடல் நெருப்புப் பற்றி வேகின்றது.

தூர இருந்தாலும் துவளாத தீபஸ்தம்பம்
எனக்கு விருப்பம்
அதன் முன்னாலிருக்கிற நெருப்புக் குண்டத்தில்
தூபம் போட்டுப் புகை வரவழைக்கும் போது
நான் பயனடைகிறேன்.

கடவுள் அருகில் சென்று தட்சணை கொடுப்பவரும்
பிரகாரம் சுற்றுபவரும் இமை மூடாமல் அவ்வப்போது
என்னையே நோக்குவர்
என்னுடைய மனது மட்டும்
கடவுளிடம் கருவறையில்.

பூ, சந்தனம் வாங்குபவரின் ஆத்மா
கழற்றிய காலணிகளிடம் வெளியே

தினமும் முன் வாசலில் நின்று கழுத்தைச் சாய்த்து
எட்டிப்பார்த்துப் புனிதமடையும் என் ஆத்மா
உள்ளே இருக்கும்
கடவுளிடம்.

சிங்கள மூலக்கவிதை : அஜித்.சீ.ஹேரத்
ஆங்கிலத்தில் : டீ. பிரீத்தி, எம். கல்பனா, கூம்பியா,
பேராசிரியர். கே. கிளார்க்
தமிழாக்கம் : தமிழ்க்கிழவி



### அஜித்.சீ.ஹேரத்

அஜித்.சீ.ஹேரத் உணர்வு பூர்வமான சிங்களமொழிக் கவிதைகளை எழுதுவதில் வல்லவர். 90களின் முற்பகுதியில் தெற்கில், தனது தலைமுறையின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவராகப் பிரசித்தி பெற்றவர். இவர் ஒரு சிறந்த ஓவியரும், கார்டூனிஸ்டும், அரசியல் ஆய்வாளரும், ஊடகவியலாளரும் ஆவார்.

# ஏழு கனவுகள்

**முதலாம் கனவு: நீ கவனிக்கவேயில்லை**

முடிவிலியின்
கற்பனைக்கு எட்டாத புள்ளிகளிலிருந்து
நான் விழுந்து கொண்டிருந்தேன்.
நகரத்தின் தெருக்களின் ஊடே
சேற்று நீர் பிரவாகித்தது.
அந்நீரில் விழுவதற்குச்
சில கணங்களுக்கு முன்பாக,
சிதிலங்களுக்கு நடுவே
மிதந்து வரும் ஒரு தொட்டிலில்
சிறு குழந்தையாக விழித்தெழுந்தேன்.
தங்களது ஆடைகளை
அள்ளிச் சொருகியபடி
சேற்று நீரில் நடந்தவாறு
என்னைப் பார்த்துப்
புன்னகையோடு கையசைத்த
ஆண்களையும் பெண்களையும்
கடந்து சென்றேன்.

தொட்டில் கவிழ்ந்து
சாக்கடையில் வீழ்கின்ற வேளையில்
வெளிச்சாய்ந்து,
குளிர் தாங்கவொண்ணாது நடுநடுங்கித்
தொட்டிலினின்றும் வெளியேறி,
பேரவாவுடன் உன்னைப்
பின்தொடர்ந்தேன்,
நீ கண்டு கொள்ளவேயில்லை!
திடீரென்று,
யாரோ என்னை இறுகப் பற்றி
அப்பிரவாகத்தினுள்ளேயே
வீசி எறிந்தார்கள்.

மீளவும் நான்
வீழ்ந்தேன்..
வீழ்ந்தேன்..
தரைதொடுவதற்கு முன்பதாக
நான் விழித்தெழுந்ததை
உணர்ந்து கொண்டேன்.

**இரண்டாவது கனவு: உன் முத்தம் என் சாபத்தைப் போக்கவுமில்லை**

இடைவிடாத மழை.
சாளரத்தின் வெளியே
வெறித்துப் பார்க்கிறாய்.
உனது சுவாசத்திலிருந்து
எழுகின்ற பனிப்படலமானது
நக்கிள்ஸ் மலைத் தொடரை
மறைக்கிறது.

நான் குளோரோபார்மால்
குப்புற வீழ்ந்தவன் போல
தூக்கத்தில் ஆழ்கிறேன்.
விழித்தெழுந்த போது,
உனது கண்ணிலிருந்து
ஒரு நீர்த்துளி தெறிக்கிறது.
அறுவைக்கான ஆய்வுகூட மேசையில்
பரந்து கிடந்தபடி உன்னை
வைத்த கண் வாங்காமற் பார்க்கிறேன்.

ஒரேயொருமுறை, இறுதியாக,
என்னை மெல்ல அணைத்து முத்தமிடுகிறாய்,
சாளரத்தைத் திறந்து
என்னை வெளியே வீசியெறிகிறாய்,
அன்றைக்கு ஆய்வு கூடத்தை
விட்டுச் சென்றது தான்.
அதன் பின்னர்,
என்றைக்கும் நீ பள்ளிக்குத்

*திரும்பவே இல்லை.*
*உன் முத்தம்*
*என் சாபத்தைப் போக்கவுமில்லை,*
*விழுவதற்கு முன்னர்*
*நான் விழித்தெழவுமில்லை.*

**மூன்றாவது கனவு: ஆக்கிரமிக்க முடியாத பாலம்**

*பாலத்தின் மீது,*
*கைகளிரண்டையும் பின்புறமாகக் கட்டி,*
*உன்னை நிர்வாணமாக*
*முட்டுக்காலில் இருத்துகிறார்கள்.*

*உன்னைக் காப்பாற்ற*
*நான் வீரிட்டலறுகிறேன்.*
*எஞ்சியிருந்த கடைசித் துப்பாக்கி*
*இருக்கும் இடத்தை*
*நீங்கள் யாருமே சொல்ல மறுக்க,*
*நான் நிலத்தைக் கிளறுகிறேன்.*
*துப்பாக்கி தன்னைத்தானே*
*புதைத்துக் கொண்டிருந்தது.*
*என்னால் கண்டு பிடிக்க முடியவேயில்லை!*
*ஆற்றில் பிணங்கள் மிதந்து வருகின்றன.*

*அன்று முதல்,*
*இந்தப் பாலத்தைக்*
*கடக்க நேரும் போதெல்லாம்*
*காயம் பட்ட இதயத்துடன்*
*நான் நீரில் வீழ்கிறேன்.*
*இன்னமும்*
*வீழ்ந்து கொண்டு தானிருக்கிறேன்.*

**நான்காவது கனவு: நீலவானையும் முகில்களையும் பார்த்தேன்**

*அந்தத் தடுப்பு முகாமில்*
*கொடித்தோடைப் பந்தலின் கீழ்*

மக்கிப்போன மரத்துண்டே
கட்டிலென அமர்ந்திருந்து,
தப்பிச் செல்லும் வழிகளைப் பற்றிச்
சிந்தித்தவாறு இருந்தேன்.

சுரங்கம் அமைத்தால்,
ஏழு மலைகளுக்கும்
காடுகளுக்கும் அப்பால்
இன்னுமோர் நீல வானையும்
முகில்களையும் பார்த்தல் கூடுமென
நீ என் காதில் கிசுகிசுத்தாய்.

கைவிடப்பட்ட பொதுக்கிணற்றில்
நீர் சலனமற்றிருக்கும்
ஓர் மதிய வேளையில்,
கிணற்றுக் கட்டிலமர்ந்து
கீழே நோக்கிய போது
அந்தச் சுரங்கம் தெரிந்தது.
பூமியின் மறுமுனையில்
இன்னொரு நீல வானையும்
வெண்முகில்களையும் காட்டியது
அடியற்ற கிணறு.
நீ என் கண்களின் ஊடாக
ஊடுருவிப் பார்க்கிறாய் என்னை.

நீல வானம், வெள்ளை மேகங்கள்,
மேலும் உன் முகம்.
படிமங்கள் படிப்படியாய்
மறைவுற முன்னர்,
தடுத்து வைத்திருக்கப் படுவோரின்
தண்ணீரிறைக்கும் வாளிகளினால்
இடைவிடாது இந்நீர் கலக்கமுற முன்னர்,
இந்தக் கிணற்றின் ஊடாகத்
தப்பி ஓடிவிடவே விரும்புகின்றேன்.

*மீளவும்*
*முடிவிலாத் துளையொன்றின் ஊடே*
*நீல வானை நோக்கி*
*விழுகின்றேன்.*

**ஐந்தாவது கனவு: நீலா ககித்தான் சிதை**

*நீலக் ககித்தான்(tarpaulin) வேயப்பெற்ற*
*முகாம் குடிசையோடு*
*தொட்டிலும் எரிகின்ற போது,*
*கருகிய பிஞ்சுக் கைகால்களோடு*
*நீ வெளியே தவழ்ந்து வந்தாய்,*
*அஞ்சி நடுங்குகின்ற உன் போராட்டத்தைக்*
*கையறுநிலையில் பார்த்திருந்தேன்.*
*ஒரு முறை, ஒரே ஒரு கணம்,*
*எங்கள் கண்கள்*
*சந்தித்துக் கொண்டன.*
*அதை நீ கவனித்தாயா என்பதை*
*ஒருபோதும் நான் அறியப் போவதில்லை.*
*மெல்ல மெல்ல நகர்ந்து,*
*புதைபடிவமாகிப் போயிருந்த*
*என்னைக் கடந்து சென்று*
*படுகுழியுள் வீழ்ந்து,*
*பிணங்களோடும், புகையோடும்*
*கலந்து மறைந்து போனாய்..*
*உனக்குக் காப்பளித்த*
*அந்தக் குழியை மண்ணால் நிரவி*
*ஒரு நடுகல்லை அமைத்துச் சென்ற*
*மண்வாரி எந்திரங்கள் (bulldozers)*
*மெல்ல மெல்லத்*
*தொலைவாகி மறைந்திடினும்,*
*என் கண்ணுக்குத் தெரிவதெல்லாம்*
*மணல் மீது உயர்த்திய*
*உன் பிஞ்சுக் கையே தான்..*

## ஆறாவது கனவு: தாமதித்ததால் ஆயுளுக்கும் உன்னைத் தொலைத்தேன்


துயர்மிகுந்த விழிப்போடு எழுந்திருந்தேன்.
முன்கூட்டியா, தாமதித்தா
என்று தெரிந்திருக்கவில்லை.
இன்னமும் இருள் கவிந்தே இருந்தது.
திடீரென்று,
யாரோ எங்கேயோ எனக்காகக்
காத்திருப்பது போல் தோன்றியது.
யார், எங்கே என்பது தெரியவில்லை.
ஒருவேளை அது நீயாகவும்
இருந்திருக்கக் கூடும்.
எதிர்வரும் நாட்களெல்லாம்
சந்திப்புகள், பணிகளென
நாட்காட்டியிலிருந்து கிழிந்து போயின.
கடந்து போன நாட்களும் மாதங்களுமே
எஞ்சி இருக்கின்றன..

ஏ-9 நெடுஞ்சாலையில் நடந்து
கடைசி இராணுவக் காவல் அரணையும்
தாண்டி வந்து விட்டேன்.
இருந்தும்,
உன்னை எங்கேயும் காணோம்.
நான் தாமதமாக வந்ததால்
நீ போய் விட்டாயோ தெரியவில்லை.
வன்னிக்கு வந்தேன்;
அங்கேயும் நீயில்லை.
ஆதலால்,
புகைப்பூஞ்சுருளின் (சிகரெட்)
உனக்கான பாதியுடன்
சிதிலமடைந்த ஒரு வீட்டின்
வாயிற் படியில்
காத்திருக்கிறேன்..

**ஏழாவது கனவு: சிதறிப் பறந்தது கடந்த காலம்**

*சுற்றி வளைப்பும் தேடுதல் வேட்டையும்
முடிந்ததன் பிற்பாடு
படையினர் போய்விட்டார்கள்.
உடைக்கப் பட்டிருந்த அறையில்
சுக்கல் சுக்கலாகக்
கிழித்து வீசப்பட்டிருந்தது
எங்கள் குழுவின் கடைசிப் புகைப்படம்.
காலத்தோடு மங்கிப்போய்,
சிதறிக் கிடந்த
அந்தத் துண்டுகளில்
உயிர்ப்புடன் மிளிர்ந்தது -
அறியாத சேரிடங்களை நோக்கி
வழி பிரிந்து செல்லும் முன்னர்
நாங்கள் ஒன்றாகக் கழித்த
கணங்களின் இன்முறுவல்.
இணைத்தொட்டும் பெருவிருப்போடு
அத்துண்டுகளை
சன்னலோரத்தில் வைத்தேன்.
திடீரென்று எங்கிருந்தோ வந்த காற்று
அவற்றைக் கலைத்துப் போட்டது.
இலையுதிர் காலத்தின்
இறுதி இலைகளுடன் அவையும்
துண்டு துண்டாகத்
தொலைதூரத் தலங்களுக்குத்
தூக்கி வீசப்பட்டன.
காற்றில் உலைவுறும்
காகிதத் துண்டுகளானோம் நாம்.
இழப்பின் வரைபடம்’*

கோகிலவாணி தேவராஜா




# ‘இழப்பின் வரைபடம்’ மொழிபெயர்ப்பு நாவல் அறிமுகம்

வந்தேறிய நாடுகள் எவையென எங்கும் குறிப்பிடப்படவில்லை. போரின்போது தனது தாய் காணாமற்போய்விட்டதைப் படம் வரைபவள், அவ்வப்போது நினைத்துப் பார்க்கிறாள். என்னவாகியிருக்கும், இறந்திருப்பாரோ என்றெல்லாம் பலபட எண்ணுகிறாள். அவளது சகோதரியோ காணாமற்போன, தனது உற்ற சினேகிதியும் அவளது குழந்தையும் என்னவாகியிருப்பர் என மிகுந்த ஈடுபாட்டுடன் தேடும் முயற்சியில் நேரம் செலவிடுகிறாள். தாயைத் தேடுபவள் இவ்வாறு நினைக்கிறாள். “இறந்தவர்கள் குறித்த பட்டியலிலாவது குறைந்தது ஒருவித இறுதித்தன்மை இருக்கிறது. அவர்களின் இறப்புக்கு இரங்குவதற்காவது அது வழிசெய்கிறது. துயரத்தின் வலியையும் அதன் வீரியத்தையும் தாண்டி, இரங்கல் ஒருவித அடித்தளத்தைத் தருகிறது; அதன்மீது எதையாவது மீண்டும் உருவாக்கலாம். ஆனால் காணாமல் போனவர்களின் பட்டியலுக்கு அத்தகைய தன்மை எதுவுமில்லை. அதில் இருக்கும் பெயர்கள்

கொண்ட
ந ப ர் க ளி ன்
இன்மையே அதன்
தன்மை. அது தகவல்
களஞ்சியமல்ல. தகவல்.
இல்லாமையின் களஞ்சியமே அது."
இந்த வரிகள் காணாமல் ஆனவர்கள்,
ஆக்கப்பட்டவர்கள் என நீண்ட காலமாக
அல்லலுறும் எங்கள் இனத்தின் வலிகளையும்
நினைவுபடுத்துகிறது.

மேலும் "இதுதான் என்னுடைய நாடு. இனி இதுபோல
இருக்காது எனினும் என் மனத்திலும், என் தரவுகளிலும், என்
வரைபடத்திலும் இருக்கும் நாடு இதுதான். இதுபோன்ற நாடு இனி இல்லை"
போரின் விளைவாக நாடுகளின், நகர்களின் எல்லைகள், அடையாளங்கள்
சிதைவதும், மாறிவிடுவதும்கூட திகைப்பையும், துன்பத்தையும் தரவல்லது.

இவ்வாறு போரவலங்களால் வருந்திவாழும் மனிதரின் துயரை மிகைப்படுத்தாது இயல்பு வாழ்வோடு வாழ்வாக, கதை ஓட்டத்தின் ஊடாகக் கூறி, வாசிப்பினூடாக வாசகமனத்தை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுகிறது, 'இழப்பின் வரைபடம்' நாவல்.

**நூலாசிரியர் லாரா ஃபெர்கஸ் பற்றி,**

ஆஸ்திரேலியாவில் வளர்ந்தவர், பாரிசில் எழுத்து, பெண்கள் வாழ்வு, சர்வதேச சட்டங்கள் ஆகியவற்றில் பட்டங்கள் பெற்றவர். புலம்பெயரும், அகதிகளாகும் பெண்களுக்கான பல அமைப்புகளில் பணியாற்றியவர். மனித உரிமை ஆர்வலர். இவரது பணிகளில் பெண்கள் மீதான வன்முறைகள் சிறப்புக் கவனம் பெறுகின்றன.

**மொழிபெயர்ப்பாளர் பற்றி,**

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுபவர். காலச்சுவடு, தி நியூ இந்தியன் போன்ற பத்திரிகைகளில் மாற்றுப் பாலியல் குறித்த கட்டுரைகள் எழுதியுள்ளார். பெருமாள் முருகனின் நான்கு நாவல்கள், கவிதைத் தொகுப்பொன்று, அம்பையின் சிறுகதைத் தொகுப்பு என்பவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் முனைவர் ஆய்வுக்காக எழுதிவருகிறார்.

மூலம் : ரேசா சைய்ச்சி (பெர்சிஸ்)
மொழிபெயர்ப்பு : சுகிர்தா சண்முகநாதன்
(யேர்மன் மொழியிலிருந்து தமிழிற்கு)




# உண்மைகள்


*விழி ததும்பும் கண்ணீரில் தெரியும்*
*தெளிவற்ற உலகை உணராது,*
*பறப்பை மறந்த பறவைகளாய்*
*உணர்வற்ற கிளைத் தங்கல்கள்!*
*ஒரு ரொட்டித் துண்டு தானும்*
*கிடைக்காத பசியின் கொடுநாள்!*
*சோர்வில் சுழன்றாடும்*
*கொடிய கனவுகளில் நடனங்கள்!*
*இத்தனைக்கும் நடுவே,*
*தூங்கிப் போய்விடும் போது*
*கடையிதழில் கேலிப்புன்னகையோடு*
*கடக்கின்றன,*
*தூசிபடிந்த ஆடையணிந்த உண்மைகள்!*

முருகபூபதி


# அவுஸ்திரேலியாவில் மொழிபெயர்ப்பு முயற்சிகள்

தகவல் குறிப்பு





அவுஸ்திரேலியா பல்லின கலாசார நாடு. பல மொழி பேசும், பல இனத்தவர்கள், பல தேசத்தவர்கள் வாழும் ஒரு குடியேற்ற நாடு. ஒப்பீட்டளவில் இலங்கையின் சனத்தொகைதான் இந்தப்பெரிய கண்டத்திலும் என்பது குடிசனமதிப்பீடு தெரிவிக்கும் உண்மை. வெள்ளை இனத்தவர்களிடம் ஆட்சி அதிகாரம் இருந்தபோதிலும் இத்தேசத்தின் பூர்வீக உரிமைக்குரியவர்கள் அபோர்ஜனிஸ் மக்கள். அவர்களின் பண்பாட்டுக்கோலங்களில் அவர்கள் வரையும் புள்ளிக்கோல ஓவியங்களும் டிரிடிடிஜூ என்ற வாத்தியக்கருவியும் முக்கியமானவை.

அபோர்ஜனிஸ் இனத்தைச்சேர்ந்த ஹென்றி லோசன் என்பவர் புகழ்பெற்ற இலக்கியப்படைப்பாளி. இவரது கல்லறையை அவுஸ்திரேலியா தஸ்மானியாவில் போர்ட் ஆதர் என்னுமிடத்தில் பார்த்திருக்கிறேன். அவருடைய சில சிறுகதைகளை ஆங்கில மூலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தவர் சிட்னியில் மறைந்த மூத்த எழுத்தாளர் காவலூர் ராஜதுரையின் மகன் நவீனன் ராஜதுரை. இவர் தனது தந்தையின் சில கதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நூலுருவாக்கியுள்ளார்.

அவுஸ்திரேலியா கன்பராவில் வதியும் ஆழியாள் மதுபாஷினி உரத்துப்பேச, துவிதம், கருநாவு ஆகிய கவிதைத்தொகுப்புகளை வெளியிட்டிருப்பவர். இவரும் ஆங்கில மொழிவாயிலாக சில ஆதிவாசிகளின் கதைகள், கவிதைகளை தமிழுக்கு மொழிபெயர்துள்ளார். ஆர்ச்சி வெல்லர், சாலிமோர்கன், மெர்லிண்டா போபிஸ், ஜாக் டேவிஸ், எலிசபெத் ஹொஜ்சன், பான்சி ரோஸ் நபல்ஜாரி ஆகியோரின் படைப்புகள் சிலவற்றை (சிறுகதை, கவிதை) தமிழுக்குத்தந்துள்ளார். தொடர்ந்தும் மொழிபெயர்ப்பு பணிகளில் ஆழியாள் மதுபாஷினி ஈடுபட்டுவருகிறார்.

அவுஸ்திரேலியாவில் 90 களில் வெளிவந்த மரபு (ஆசிரியர்: விமல் அரவிந்தன்) இலக்கியச்சிற்றேட்டில் முன்னாள் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி காசிநாதன், விஜய்தான் தேத்தா எழுதிய ஹிந்திக்கதையை (மனுஷி என்ற இதழில் பிரசுரமானது) ஆங்கில மூலத்திலிருந்து ' துவிதம்' என்ற பெயரில் மொழிபெயர்த்து எழுதியிருந்தார். குறிப்பிட்ட கதை 'பஹலி' என்ற பெயரில் ஹிந்தியில் ஷாருகான் நடித்து வெளியானது.

சிட்னியில் வதியும் மாத்தளை சோமு, அவுஸ்திரேலிய ஆதிவாசிகளின் கதைகள் சிலவற்றை ஆங்கில மூலத்திலிருந்து தமிழுக்குத்தந்துள்ளார். அவை கணையாழி அவுஸ்திரேலிய சிறப்பிதழில் (2000) வெளியாகியுள்ளன.

அவுஸ்திரேலியாவிலும் தமிழகத்திலும் வாழ்ந்து 2014 இல் மறைந்த எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) சில ஆபிரிக்க இலக்கியங்களை தமிழுக்கு தந்துள்ளார். சீநு ஆச்சுபேயின் மக்களின் மனிதன், செம்பென் ஒஸ்மானின் ஹால, நகீப் மஹ்பூஸின் மிராமார், ஜொன்னி விராவின் வண்ணத்துப்பூச்சி எரிகிறது, மையகென்ரோவின்

நித்திரையில் நடக்கும் நாடு ஆகிய ஆபிரிக்க இலக்கியங்களை அவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

எஸ்.பொ. தமிழகத்திலிருந்தே இவற்றை மொழிபெயர்த்து தமது மித்ர பதிப்பகம் ஊடாக வெளியிட்டிருந்தார். அவரிடமிருந்த ஆங்கிலப்புலமை, ஆப்பிரிக்க இலக்கியங்களை தமிழ் வாசகர்களுக்கு வழங்கவேண்டும் என்ற வேணாவாவை பூர்த்திசெய்துள்ளது.

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் நல்லைக்குமரன் குமாரசாமி தொடர்ச்சியாக மூன்று நூல்களை மொழிபெயர்த்தவர். தொழில் ரீதியாக மொழிபெயர்ப்பாளராக இங்கு பணியாற்றும் இவர், ஆங்கிலத்திலும் கவிதைகள் எழுதுபவர். நல்லைக்குமரனின் ஆங்கிலக்கவிதைகள் அமெரிக்காவில் வெளியான சர்வதேசக் கவிஞர்களின் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது.

இங்கு உதயம் ( தமிழ்-ஆங்கிலம் இருமொழி மாத இதழ்) வெளியிட்ட நடேசனின் வேண்டுகோளை ஏற்ற நல்லைக்குமரன் குமாரசாமி, பிரசித்தி பெற்ற ஜோர்ஜ் ஓர்வெல் எழுதிய Animal Farm என்ற நாவலை விலங்குப்பண்ணை என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இந்நாவல் உதயம் இதழில் தொடராக வெளிவந்து பின்னர் நூலுருப்பெற்றது. இதுவரையில் இரண்டு பதிப்புகளை இந்நூல் கண்டுள்ளமை குறிப்பிடத்தகுந்தது.

Animal Farm சிலநாடுகளில் மேல்வகுப்பு மாணவர்களின் பாடநூலகத்திகழுகிறது. அத்துடன் திரைப்படமாகவும் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வதியும் எம்மவர்கள் ஆங்கில மூலத்திலிருந்து தமிழுக்குப் பெயர்த்த படைப்புகள் பற்றிய தகவல் குறிப்புகளை பதிவுசெய்யும் அதேவேளை இந்த மொழிபெயர்ப்பாளர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு முயற்சிகளையும் சொல்ல விரும்புகின்றேன்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து முன்னர் பாப்புவாநியுகினியிலும் பின்னர் அவுஸ்திரேலியா சிட்னியிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் கவிஞர் அம்பி, பல நூல்களின் ஆசிரியர். தாம் முன்பு எழுதிய கிறீனின் அடிச்சுவட்டில் என்ற நூலை தாமே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, Scientific Tamil Pioneer என்ற நூலை வெளியிட்டார். அம்பி, Lingering Memories, String of Pearls ஆகிய ஆங்கில சிறுவர் (இலக்கிய) கவிதை நூல்களையும் எழுதியுள்ளார்.

விலங்குப்பண்ணை மொழிபெயர்ப்பையடுத்து நல்லைக்குமரன் குமாரசாமி, இலங்கையிலும் தமிழ் இலக்கிய உலகிலும் அறியப்பட்ட மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் வரையப்படாத சித்திரத்துக்கு எழுதப்படாத கவிதை (சுயசரிதை) நூலை Undrawn Portrait For Unwritten Poetry என்ற பெயரில் மொழிபெயர்த்தார்.

இங்கு வதியும் விலங்கு மருத்துவர் நடேசனின் வண்ணாத்திக்குளம் நாவலையும் நல்லைக்குமரன் *Butterfly Lake* என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இலங்கையில் பிரசித்திபெற்ற பதிப்பகம் விஜித்த யாப்பா பப்ளிகேஷன் இந்நூலை வெளியிட்டமை குறிப்பிடத்தகுந்தது.



வண்ணாத்திக்குளம் நாவலின் முதற்பதிப்பு சென்னை மித்ர பதிப்பகத்திலிருந்து வெளியானதையடுத்து, அதனைப்படித்த திரைப்பட இயக்குநர் மகேந்திரன் அதனை திரப்படமாக்குவதற்கு முயற்சித்து திரைக் கதை வசனமும் எழுதினார் என்பது பழையசெய்தி. ஏற்கனவே சில நாவல்களை அவர் திரைப்படமாக்கியவர் என்பது கலை, இலக்கிய உலகம் அறிந்த செய்தி. தமிழில் எழுதப்பட்ட வண்ணாத்திக்குளம் நாவல் இரண்டு பதிப்புகளைக்கண்டுள்ளது. அதனை மடுள்கிரியே விஜேரட்ன என்பவர் இலங்கையில் சிங்கள மொழியில் பெயர்த்தார்.

சிட்னியில் வதியும் பேராசிரியர் ஆ.சி. கந்தராஜாவின் தேர்ந்தெடுத்த பத்துக்கதைகளின் தொகுப்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டைச்சேர்ந்த ஆங்கிலத்துறை பேராசிரியர் பார்வதி வாசுதேவ் என்பவர் மொழிபெயர்த்தார். நூலின் பெயர்:- *Horizon.*

அத்துடன், பார்வதிவாசுதேவ், நடேசனின் உனையே மயல்கொண்டு என்ற நாவலை *Lost In You* என்ற பெயரில் மொழிபெயர்தார்.

தமிழ்நாடு இராணி மேரி கல்லூரியில் ஆங்கில இலக்கிய விரிவுரையாளராகப்பணியாற்றிய கவிஞ்ரி சுமதி தமிழச்சி தங்கபாண்டியன் சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் ஆய்வுப்பணிக்காக வந்தவர்.

இங்கு வருவதற்கு முன்னர் தமது கல்லூரியில் புகலிடத் தமிழர்களின் ஆங்கில இலக்கிய முயற்சிகள் பற்றி உரையாற்றும்போது, அவுஸ்திரேலியா

மெல்பனில் வாழ்ந்த அருண்.விஜயராணியின் ( இவர் கடந்த 2015 டிசம்பரில் மெல்பனில் மறைந்துவிட்டார் ) தொத்து வியாதிகள் (கணையாழி அவுஸ்திரேலிய சிறப்பிதழில் வெளியானது) என்ற சிறுகதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து (Contagious Diseases ) சமர்ப்பித்தார்.

இலங்கையில் சித்திரலேகா மௌனகுரு பல வருடங்களுக்கு முன்னர் தொகுத்து வெளியிட்ட இலக்கிய உலகில் கவனிப்புக்குள்ளான 'சொல்லாத சேதிகள்' கவிதை நூலில் இடம்பெற்றுள்ள ரேணுகா தனஸ்கந்தாவும் அவுஸ்திரேலியா மெல்பனில் வசிக்கிறார். இவர் இலங்கையில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர்.

முருகபூபதியின் புதர்க்காடுகள் என்னும் சிறுகதையை ரேணுகா Bush Walk என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இச்சிறுகதை இலங்கையில் The Island பத்திரிகையில் வெளியானது.

கனடாவில் வதியும் சியாமளா நவரத்தினம் அங்கு தொழில் ரீதியாக மொழிபெயர்ப்பாளராக பணியாற்றுபவர். மும்மொழிகளிலும் பரிச்சயம் மிக்க இவர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு வருகைதந்தார்.

சியாமளா, அருண்.விஜயராணியின் 'கன்னிகாதானங்கள் ' கதைத்தொகுப்பிலிருந்த அனைத்துக்கதைகளையும், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். எனினும் இந்த மொழிபெயர்ப்பு இன்னமும் நூலுருவில் அச்சாகவில்லை.

சியாமளா அவுஸ்திரேலியா வாழ் படைப்பாளிகள் சிலரதும் இங்கு சிறிதுகாலம் வசித்தவர்களினதும் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

இவர் மொழிபெயர்த்த, எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ரவி, கல்லோடைக்கரன், நித்தியகீர்த்தி, அ.சந்திரகாசன், புவனா ராஜரட்னம், நடேசன், ஆவூரான், ரதி, ஆசி. கந்தராஜா, அருண்.விஜயராணி, முருகபூபதி, தி.ஞானசேகரன், த.கலாமணி ஆகியோரின் கதைகளுடன் நவீனன் ராஜதுரை மொழிபெயர்த்த ஆழியாள் மதுபாஷினியின் ஒரு கதையுடன் மொத்தம் 15 கதைகளின் தொகுப்பு ஙிமீவீஸிரீ கிறீவீஸ்மீ கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொழும்பில் நடந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் தலைமையில் இடம்பெற்ற மொழிபெயர்ப்பு அரங்கில் வெளியிடப்பட்டது. இதனை அறிமுகப்படுத்தி உரையாற்றிய திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன், பின்னர் அவுஸ்திரேலியா வந்தபொழுதும் அதனை அறிமுகப்படுத்தி உரையாற்றியதுடன் Observer பத்திரிகையிலும் எழுதியிருந்தார்.

இந்த ஆக்கம் தகவல் குறிப்பேயன்றி விரிவான திறனாய்வு அல்ல. அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பு முயற்சிகள் பற்றிய அறிமுகம் மாத்திரமே.

இது இவ்விதமிருக்க அவுஸ்திரேலியாவில் வதியும் சகுந்தலா கணநாதன் என்னும் இலக்கிய ஆர்வலர் ஆங்கிலத்தில் எழுதிய *White Flowers of Yesterday* என்ற வரலாற்றுப்புதினம் எழுதியுள்ளார். பிரான்ஸ் நாட்டின் **1711 - 1724** காலகட்டத்தை சித்திரிக்கும் புதினம் அது.

முருகபூபதியின் சில சிறுகதைகள் சிங்கள மொழியில் வெளியாகியுள்ளது. குறிப்பிட்;ட மொழிபெயர்ப்பு நூலின் பெயர் மதக்கசெவனெலி. இதன் ஆங்கிலப்பதம் *Shadows Of Memories* இதனை இலங்கையில் மொழிபெயர்த்தவர் ஏ.சி. எம். கராமத்.

அவுஸ்திரேலியாவில் ஆங்கில மொழியை பிரதானமாகப் பயிலும் எம்மவரின் பிள்ளைகள், எதிர்காலத்தில் தமிழ் இலக்கியங்களை தமிழில் படிக்காதுபோனாலும் ஆங்கிலத்தின் ஊடாக படிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது.

இதுவரையில் அவுஸ்திரேலியாவிலும் தமிழர் புலம்பெயர்ந்துவாழும் ஏனைய நாடுகளிலும் ஆங்கிலம் மூலம் கல்வி பயிலும் இளம்தலைமுறையினர் மத்தியில் வாசிக்கும் ஆர்வமுள்ளவர்களிடம் இந்த மொழிபெயர்ப்புகள் சென்றடையவேண்டும்.

அவர்களிடம் இம்மொழிபெயர்ப்பு குறித்த சிந்தனை எவ்வாறு பதியப்படுகிறது என்பதை படைப்பாளிகள் தெரிந்துகொள்ள வேண்டும். சுத்தியும் சுத்தியும் சுப்பரின் கொல்லைக்குள் நின்றுகொண்டு மூத்ததலைமுறையினர் மாத்திரம் பரஸ்பரம் இலக்கியம் பேசாமல், இளம் தலைமுறையினரையும் தாம் நடத்தும் இலக்கிய விழாக்கள், சந்திப்பு அமர்வுகளுக்கு அழைத்து அவர்களிடம் இந்த ஆங்கில மொழிபெயர்ப்புகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறியவேண்டும்.

இலக்கிய உலகில் மொழிபெயர்ப்பாளர்களுக்குரிய இடம் இப்பொழுதும் முறையாக கவனிக்கப்படுவதில்லை. இந்நிலை மாறவேண்டும்.


மொழிபெயர்ப்பு படைப்புகள் ஏராளமாக வெளியாகும் தற்காலத்தில் அவைகுறித்த விமர்சனங்களும் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இலங்கையிலும் தமிழகத்திலும் வெளியாகும் சிற்றிதழ்கள் மொழிபெயர்ப்புகளுக்கு சிறந்த களம் வழங்கிவருகின்றன.

மொழிபெயர்ப்பு தொடர்பாக, ஜெயமோகன் தெரிவித்துள்ள ஒரு கருத்தையும் பதிவுசெய்து நிறைவு செய்கின்றேன்.

ஜெயமோகன் சொல்கிறார்:- "நல்ல மொழிபெயர்ப்பானது அழகான மொழிபெயர்ப்பு அல்லது பயனுள்ள மொழிபெயர்ப்பு என இருவகைப்படும். ஒரு படைப்பிலக்கியம் மொழியாக்கம் செய்யப்பட்டால், அதன் படைப்பூக்கத்தின் பெரும்பகுதியை நம்மில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அம்மொழியாக்குநர் செயல்பட்டிருக்கவேண்டும்" (நூல்: எதிர் முகம் - இணைய விவாதங்கள்)

மூலம் : மாக்சிம் கார்க்கி

தமிழில் : மு. தயாளன்



# உப்பளத்தில்...

“உனக்கு வேலை வேணுமெண்டால் உப்பளத்துக்குப் போ. கஸ்டமான வேலைதான். ஒருவரும் அந்த வேலையிலை நிலைச்சு நிற்கிறதில்லை. நீயும் ஒண்டு இரண்டு நாளுக்குப் போய்ப் பார்.ஒரு தள்ளு வண்டிலுக்கு ஏழு கோப்பெக் தருவாங்கள். அந்தக் காசு ஒரு நாட் செலவுக்குக் காணும். “

என்று அந்த மீனவ நண்பன் கூறினான். எனக்குக் கூறிவிட்டு ஒரு பாடலை முணுமுணுத்தபடி தன் வேலையில் மூழ்கினான்.

நான் அவனது குடிசையின் அருகில்தான் இருந்தேன்.

“ போய் முயற்சித்துப் பார். உன்னால் முடியவில்லை என்றால் திரும்ப இங்கே வா. எங்களுக்கும் அந்த வேலையின் அனுபவங்களைச் சொல்லு. வாழ்க்கை ஒரு சிக்கல்தான். என்ன செய்வது” என்று மீண்டும் அந்த மீனவ நண்பன் கூறினான்.

நான் அவனுக்கு நன்றியைக் கூறிவிட்டு அந்த உப்பளத்தை நோக்கிப் புறப்பட்டேன்.

ஆவணி மாதத்து வெய்யில் எறித்துக் கொண்டிருந்தது. வானம் தெளிவாகவும் வெளிச்சமாகவும் இருந்தது.

கடலின் அலைகள் அமைதியாகக் கரையைத் தொட்டுச் சென்று கொண்டிருந்தன. தூரத்தில் கதிரவனின் ஒளி மணலில் பட்டுத் தெறித்து மஞ்சளாக மணல் தெரிந்தது.

நான் இருந்த அந்தக் குடிசை மறைந்து கொண்டிருந்தது.

அந்தக் குடிசையில் இருக்கும்போது மீனவ நண்பன் கூறிய கதைகள் எனது மனநிலையைக் குழப்பி இருந்தன.

உழைப்பவர்களின் வாழ்க்கையில் எவ்வளவு பிரச்சினைகள் என்று மனம் வேதனைப்பட்டது.

நான் கடற்கரை ஓரமாக நடந்து கொண்டிருந்தேன்.

அலைகளின் ஓசையானது எனது மன உணர்வுகளைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தது. தூரத்தில் எதுவும் தெரியவில்லை. காலைவேளையாதலால் பாதை புகார் நிறைந்ததாக இருந்தது.

அந்தப் புகாரினூடாகத் தெரிந்த நகரம்தான் ஒச்சாக்கோவ்.

உப்பளங்கள் நிரம்பவுள்ள நகரம். உப்பளங்களை நான் நெருங்கியபோது களைத்திருந்தேன்.

உப்பளத்தின் கரையில் நின்றபடி அவதானித்தேன். அண்ணளவாக 400 சதுரமீற்றர் அளவான மூன்று பாத்திகள் அமைக்கப்பட்டிருந்தன. நான்கு பாத்திகள் சிறுசிறு

வரம்புகளால் பிரிக்கப்பட்டிருந்தன. முதலாவது பாத்தியில் கடல் நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. இதில் உள்ள கடல் நீர் ஆவியாகும் நிலையிலிருந்தது. நீர் ஆவியானபின் பாத்தியில் இளஞ்சிவப்பு நிறமான படிகங்கள் மீந்திருந்தன. இரண்டாவது பாத்தியில் முதலாவதிலிருந்து உப்பு கும்பிகளாக சேகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இவற்றைப் பெண்களே செய்து கொண்டிருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் கதையாதபடி இறுகிய முகங்களோடு அந்த முழங்காலளவு ஆழமான கறுப்பும் வெள்ளையும் கலந்த சகதிக்குள்ளிருந்து உப்பையள்ளி இரண்டாவது நிலைக்கு நகர்த்திக் கொண்டிருந்தனர். அவர்களின் முகங்களைப் பார்க்கும்போது அந்த வேலை எவ்வளவு கடுமையானது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

மூன்றாவது நிலையில் ஆண்களே வேலை செய்து கொண்டிருந்தனர். இங்கிருந்து உப்பினை தள்ளு வண்டில்களில் அள்ளி உப்பினைப் பாதுகாப்பாக வைக்கும் இடத்திற்குக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். அந்தத் தள்ளு வண்டில்களின் கிரீச் கிரீச் சென்ற சத்தங்கள் அந்த இடத்தையே நிரப்பிக் கொண்டிருந்தன. அந்தத் தள்ளு வண்டில்களை உப்பால் நிரப்பித் தள்ளும்போது அந்த ஆண் தொழிலாளர்களின் முதுகு நரம்புகள் புடைத்தெழும் காட்சி வேலையின் கடுமையைக் காட்டின.அந்த தள்ளு வண்டில்களின் சில்லுகள் பாரத்தினால் எழுப்புகின்ற அந்த ஈன ஒலி அதைத் தள்ளும் மனிதர்களின் வெறும் முதுகுகளின் நரம்புப் புடைப்பினூடாக சொர்க்கத்துக்குச் செல்ல அனுமதி கோருவதுபோல் இருந்தன.

இந்தச் சத்தங்களுக்கு மேலாக வேலையாட்களை அதட்டுகின்ற மேலாளரின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

அவனின் வேலை தொழிலாளர் கொண்டு வந்து போடும் உப்புக்களின் மேல் தண்ணீர் தெளித்து அவற்றை பிரமிட் வடிவத்தில் அமைத்தலே.

அந்த மேலாளன் கறுத்த உயர்ந்த ஒரு ஆபிரிக்கன். அவன் நீல நிறச் சேட்டும் வெள்ளை நிறக் கீழங்கியும் அணிந்திருந்தான்.

தான் நிற்கின்ற இடத்திலிருந்து தள்ளு வண்டில்களில் உப்புக் கொண்டு வருவோரைப் பார்த்து

“ஏய், இடது பக்கத்தில் போடு பிசாசே. எங்கை போடுகிறாய். ஏய் எங்கை அசைகிறாய். நீ ஒரு சரியான தேள்”

தன்னுடைய மேலங்கியின் கீழ்ப்பகுதியால் முகத்தைத் துடைத்தபடி கத்தினான். தொடர்ச்சியாகத் தன்னுடைய வேலையைச் செய்தபடி மண்வெட்டியின் பின் பக்கத்தால் உப்பினைத்தட்டி ஒழுங்குபடுத்தியபடி கத்திக் கொண்டிருந்தான். தொழிலாளர்கள் அவனது இடது பக்கம் போடு வலது பக்கம் போடு சத்தத்தின் கட்டளைகளை ஏற்றுத் தள்ளு வண்டில்களில் கொண்டுவந்த உப்புகளைக் கொட்டிக்

கொண்டிருந்தனர். தங்களை தயார்ப்படுத்திக் கொண்டு அடுத்ததரம் உப்புக் கொண்டு வருவதற்காக மெதுவாகச் சோர்ந்தபடி நடந்து கொண்டிருந்தனர்.

திரும்பவும் ஒருவரோடொருவர் கதைக்காமல் உள்ளுக்குள் கோபத்தோடு தூசிகள் நிறைந்த அந்தப் பிரதேசத்தில் தள்ளாடித் தள்ளாடி வேலை செய்து கொண்டிருந்தனர்.

முகில்கள் அற்ற வானத்தை ஊடறுத்துக் கொண்டு சூரியன் தன் கதிர்களினூடாக வெப்பத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.அந்த வெப்பம் அந்தத் தொழிலாளர்களின் முதுகில்பட்டு அவர்களை வேதனைப்படுத்தியது.

நான் என் வேலை கிடைக்கும் அதிஸ்டத்தைப் பரீட்சிக்க தள்ளு வண்டில்கள் இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தேன்.

தொழிலாளர்களும் என்னை வாழ்த்தி அனுப்பினார்கள். என்னை அவர்கள் வாழ்த்தியதை நான் எதிர் பார்க்கவில்லை. அந்த வாழ்த்தில் தொனித்த நையாண்டியை நான் கவனிக்கத் தவறவில்லை.

என்னைக் கடந்து சென்ற முதலாவது தொழிலாளி நரைத்த தலைமுடி கொண்ட வயதானவனாக இருந்தான். இவன் தன் கீழங்கியை முழங்கால்வரை மடித்திருந்தான். மேலங்கியின் கைப்பகுதியையும் சுருட்டிவிட்டிருந்தான். என்னை ஒரு பொருட்டாக அவன் கருதவில்லை. என்னைக் கவனியாமலே கடந்து சென்றான்.

இரண்டாவது தொழிலாளி இளைஞனாக இருந்தான். அவன் என்னைக் கடக்கும்போது தன் முகத்தை வித்தியாசமாக வைத்துக்கொண்டு கடந்து சென்றான். மூன்றாவது தொழிலாளி கிறீக் நாட்டைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும். அவன் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் என்னைக் கடந்தான்.

மேலிருந்து ஒரு சத்தம் கேட்டது.

“ஏய் கண்ணாடி மனிதா” என்று என்னை யாரோ கூப்பிடுவதுபோல் ஒரு சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். அந்த நான்காவது தொழிலாளிதான். நான் கண்ணாடியைக் கழற்றி மேலங்கியின் பையினுள் வைத்துவிட்டு மேலாளர் நிற்கும் இடத்தை நோக்கி நகர்ந்தேன்.

நான் அவரின் இடத்தை அடையுமுன்பே

“ஏய், யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? வேலை தேவையா?” என்று மேலாளர் கேட்டார். நானும் அவரின் கேள்விக்குப் பதிலாக ஆமென்று தலையாட்டினேன்.

“உனக்கு தள்ளு வண்டிலோடு வேலை செய்த அனுபவம் இருக்குதா?” என்று மேலாளர் கேட்டார்.

“குப்பைகள் இழுத்து அனுபவமுண்டு” என்று சொன்னேன்.

“அந்த அனுபவம் இதற்குப் போதாது. இங்கே உப்பை அள்ளி இழுத்துச் செல்லவேண்டும்” என்று கூறிவிட்டு அவன் தன் வேலையில் மூழ்கிவிட்டான்.

நான் மீண்டும் மேலாளரைப் பார்த்து

“எப்படியாவது எனக்கு வேலை கொடுங்கள். நான் விரைவாகக் கற்றுக் கொள்கிறேன்” என்றேன்.

“நீ கற்றுக் கொள்வதற்கிடையில் உன் முதுகெலும்பு உடைந்துவிடும். சரி. ஆனால் முதல் நாள் உனக்கு 50 கோபெக்தான் தருவேன். ஏய் இவனுக்கொரு தள்ளுவண்டில் கொடு” என்று கத்தினான் மேலாளர். இவனுடைய சத்தம் கேட்டு ஒரு இளைஞன் வந்தான். அவன் கீழங்கி மட்டுமே அணிந்திருந்தான். முழங்காலுக்குக் கீழ் கால் தெரியாத அளவுக்குச் சகதி அப்பி இருந்தது.

என்னைச் சந்தேகத்துடன் பார்த்தபடி தன்னைத் தொடர்ந்து வரும்படி கூறிவிட்டு நடந்தான்.

நானும் அவனைத் தொடர்ந்து தள்ளு வண்டில்கள் வைக்குமிடத்தை அடைந்தேன். அவன் என்னைப் பார்த்து வெறுமனே இருக்கும் தள்ளு வண்டில்களில் ஒன்றைத் தெரிவு செய்யும்படி கூறினான்.

ஒவ்வொன்றாகப் பார்த்து ஒன்றைத் தெரிவு செய்தேன்.

அவன் என்னைப் பார்த்து

“நீ தெரிவு செய்த வண்டிலைப் பார். உடைந்துள்ளது.” என்று கூறினான். திரும்பவும் தேடி நல்லதாக ஒன்றைத் தெரிவு செய்து கொண்டு அவனைப் பார்த்தேன். அவன் போய்விட்டான்.

வண்டிலைத் தள்ளிக் கொண்டு உப்பு அள்ளுவதற்காக மற்றைய தொழிலாளர்களோடு நானும் புறப்பட்டேன். வண்டில் தள்ளுவது இலகுவாக இருக்கவில்லை.

மற்றத் தொழிலாளர்களோடு உரையாடவும் முடியவில்லை. அவர்கள் நன்கு களைத்துப் போயிருந்தனர். வேலைப் பழுவால் யாருடனும் கதைக்கும் நிலையில் அவர்கள் இல்லை. முகத்தை இறுக்கமாக வைத்திருந்தனர்.

என்னை எவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. திடீரென்று என் முதுகில் யாரோ தட்டுவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன்.

“எடு உன் காலை” என்று சத்தமிட்டான். வெறுப்போடு எடுத்தேன்.



இதற்குள் அந்த உக்ரேன் நாட்டு கேகுலீஸ்

“என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறாய். உப்பை அள்ளி வண்டிலை நிரப்பு” என்று சத்தமிட்டான்.

நான் நிரப்பி முடிவதை அவதானித்த அவன்

“ம்ம் கிளம்பு” என்று சத்தமிட்டான். மற்றவர்களைப் பார்த்தேன்.

வண்டிலை மிகுந்த சிரமத்துடன் தள்ளிக் கொண்டிருந்தனர். அவர்கள் வண்டிலை குனிந்து உன்னித் தள்ளும்போது அவர்களின் கழுத்து நரம்புகள் புடைத்தன.

அவர்களைப் போலக் குனிந்து வண்டிலின் கரங்களைப் பிடித்து உயர்த்தினேன். என் கைத்தசைகளும் வெடிப்பதுபோல் புடைத்தன. என் முழுப்பலத்தையும் கொடுத்து முன்னோக்கித் தள்ளினேன். மறுகணம் நான் ஒரு பக்கம் வண்டில் ஒரு பக்கம் இருந்தோம். வண்டில் ஒருக்களித்துக் கவிண்டுவிட்டது. நான் சகதியில் குப்புற விழுந்திருந்தேன்.

எல்லோரும் கெக்கட்டமிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தனர். எனக்கு எரிச்சலாக இருந்தது. அந்க உக்கிரேனியனைப் பார்த்து

“ஏய் கொஞ்சம் உதவி செய்” என்று கத்தினேன். அதற்கு அவன்

“சகதி சாப்பிடும் பிசாசே எழும்பி திரும்பவும் நிரப்பித் தள்ளு” என்று சத்தமிட்டான்.

நான் மெதுவாக எழும்ப மேலாளரின் சத்தம் கேட்டது.

“என்ன நடக்குது. பண்டியள் ஏன் இன்னும் உப்பு வரேல்லை. கெதியாய் கொண்டு வரவேணும் நாயளே. தொலைச்சுப் போடுவன்” மேலாளரின் இந்தச் சத்தம் கேட்டதும் எல்லோரும் சுறுசுறுப்படைந்தனர். எனக்குப் பின்னால் நின்ற உக்கிரேனியன் என்னைத் தள்ளினான். நான் எழும்பி வண்டிலைத் தள்ளினேன். அது வெறுமையாக

இருந்தபடியால் இலகுவாக நகர்ந்தது.

“வேலை ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும். போகப் போகச் சரிவரும். “ சத்தம் வந்த திசையைப் பார்த்தேன். ஒரு இளைஞன் கையில் காயத்துடன் இருந்தான். அவனை விசாரித்தேன். வேலை செய்யும்போது கையில் காயம். ஆறுவதற்காக இருக்கிறேன்.

“கையைக் கவனமாகப் பார்த்துக் கொள். இங்கு கையிருந்தால்தான் வேலை” என்றான்.

நான் வேறொரு வண்டிலை எடுத்து வந்து திரும்பவும் உப்பை நிரப்பினேன். இந்தத் தடவை தள்ளும்போது மிக அவதானமாகச் செய்தேன். கவிழவில்லை. இப்படி மூன்று நான்குதரம் உப்பை நிரப்பிக் கொண்டு சென்று கொட்டினேன். இப்போது நான் விழுவதில்லை. பழகிக் கொண்டேன்.

சாப்பாட்டு நேரம் என்று யாரோ சத்தமிட்டது கேட்டது. எல்லோரும் வண்டில்களை விட்டுவிட்டுச் சென்றார்கள். யாருடைய முகத்திலும் சந்தோசம் இருக்கவில்லை. வழக்கமாக ஓய்வு நேரம் எனில் சந்தோசம் வரும். இங்கு அப்படி இல்லை. எல்லோரும் வேண்டா வெறுப்பாகவே இருந்தனர். இந்த ஓய்வெல்லாம் அவர்களின் முதுகெலும்பு வலியைப் போக்கவா போகிறது.

எனக்கு நாரி நன்றாக வலித்தது. கால்களிலும் வலி.

நான் காட்டிக் கொள்ளவில்லை. உஷாராக இருப்பதுபோல் காட்டிய வண்ணம் சூப்பெடுக்கும் இடத்துக்குச் சென்றேன்.

அங்கு நீலச் சட்டை போட்ட ஒருவன் நின்றிருந்தான். அவனின் கண்களும் நீலநிறமாக இருந்தது. நான் எனது கோப்பையை நீட்டினேன்.

“உன் பெயர் என்ன?” கேட்டான்.

சொன்னேன்.

“உனக்கு அப்பா ஒழுங்காகப் பெயர் வைக்கவில்லை. மாக்சிம் பெயர் கொண்டவர்கள் சூப் குடிக்க

முதல் நாள் வரக்கூடாது. முதல் நாள் தங்களின் சொந்த உணவைக் கொண்டுவந்து சாப்பிடவேண்டும். உதாரணத்துக்கு என்னை எடுத்துக் கொள். என் பெயர் மாதவி. நான் மதியச் சாப்பாடு சாப்பிடலாம். மாக்சிம் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். புரிந்ததா?” என்று கூறினான். அவன் எனக்கு உணவு தரவேயில்லை.

நான் வெளியில் சென்று அமர்ந்தபடி சிந்தித்தேன். முன்பெல்லாம் நான் வேலை செய்த இடங்களில் தொழிலாளர்த் தோழர்களோடு எவ்வளவு சந்தோசமாக

இருந்திருப்பேன். இங்கு மட்டும் அப்படியில்லை. நான் விழுந்து காயப்பட்டபோது கூட யாரும் உதவிக்கு வரவில்லை. ஏனென்று கூடக் கேட்கவில்லை. சாப்பாட்டிடத்தில் கூட அவமானப்படுத்தப்படுகிறேன். இது ஏன் எனக்கு இங்கு நடைபெறுகிறதென்று புரியவில்லை. இதை எப்படியும் கண்டு பிடிக்கவேண்டுமென்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

◎

இறுதியாக அவர்கள் சாப்பாடு முடித்து வேலைக்குப்போக ஆயத்தமாகினர். அந்தப் பையனும் உக்ரேனியனும் எனக்கு முன்னால் வந்து அமர்ந்தனர்.

" சிகரெட் குடிக்கிறாயா?" என்று உக்ரேனியன் கேட்டான்.

"நன்றி. தாருங்கள்" என்றேன்.

"உன்னிடம் புகையிலை ஏதும் இல்லையா?"

"என்னிடம் இருந்தால் நான் ஏன் உங்களிடம் கேட்கிறேன்"

"அதுவும் சரி. இந்தா" என்று தன்னுடைய குழாயைக் கொடுத்தான்.

"தொடர்ந்து வேலை செய்யப் போகிறாயா?"

"ஓம். என்னால் முடிந்தளவுக்குச் செய்வேன்"

"ம்..நீ எங்கிருந்து வருகிறாய்?"

என்னுடைய இடத்தைக் கூறினேன்.

"இங்கிருந்து கன தூரமா?"

"ஆமாம்..ஆயிரம வேர்ஸ்ற்"

( 1 verst ÿ 3500அடி)

"ஒகோ..சரியான தூரம்தான். இங்கை வர ஏன் நினைத்தாய்?"நீ எதற்காக இங்கு வந்தாயோ அதற்காகவே நானும் வந்தேன்"

"அப்ப நீயும் உன் கிராமத்தில் களவு செய்து கிராமத்தைவிட்டுக் கலைத்ததனால் வந்தாயா?"

"என்ன?" எனக்குத் தெரிந்தது நான் அவனிடம் மாட்டிவிட்டேனென.

"நான் இங்கு வந்தது அதனால்தான். நீயும் சொன்னாய் நான் என்ன காரணத்துக்காக இங்கே வந்தேனோ.. அதே காரணத்துக்காகவே நீயும் வந்ததாக" என்று கூறிவிட்டுச் சிரசிரியென்று சிரித்தான்.

“கொஞ்சம் பொறு..”

“இப்போ பொறுக்க முடியாது எழும்பு வேலைக்கு நேரமாகிவிட்டது..” என்று கூறிக் கொண்டே “ நீ என்னுடைய வண்டிலை உபயோகி. அது நல்லது. உன்னுடையதை நான் பாவிக்கிறேன்” என்று அந்த உக்கிரேனியன் கூறினான்.

முதலில் நான் தயங்கினேன். ஏதாவது சதி இருக்குமா என்ற சந்தேகம் என் மனதில் எழுந்தது. அவன் என்னை அவசரப்படுத்தினான். சுற்றவர நிற்கும் தொழிலாளர்கள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு விடயம் எனக்குப் புரிந்தது. நான் இப்போது எல்லோரின் கவனத்தில் உள்ளேனென்பது. என்னை அவசரப் படுத்தியபோது உப்பினை அள்ளி வண்டியில் போட்டுத் தள்ள ஆரம்பித்தேன். தள்ளுவது கடினமாக இருந்தது. என் முழுப்பலத்தையும் செலுத்தித் தள்ளினேன். என் நரம்புகள் எல்லாம் வெடித்துவிடும் போல் இருந்தது. நாரி முறிந்துவிடும் போல் இருந்தது. என் கைகளின் தோல்கள் உரிந்து சதைகள் கைப்பிடியின் வெடிப்பில் அகப்பட்டு வேதனையை அதிகரித்தது. குனிந்து கைப்பிடியைப் பார்த்தேன். அது திட்டமிட்டுப் பிரிக்கப்பட்டு சிறு மரத்தடி இடையில் சொருகி வைக்கப்பட்டிருந்தது. கோபம் என் தலைக்கேறிவிட்டது.

நான் என்ன இவர்களுக்குச் செய்தேன். ஏன் இப்படி நடக்கிறார்கள் என்று மனவேதனையும் கோபமும் கொண்டேன்.

எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு

“ஏய் நீங்கள் மிருகங்களா” என்று கத்தினேன்.

அந்த உக்கிரேனியனும் நீலக் கண்ணனும்

“வா வா என்ன செய்யப் போறாய்.” என்று சண்டைக்குத் தயாராக நின்றார்கள். மற்றவர்கள் என் கண்களைப் பார்க்க முடியாமல் தலை குனிந்து நின்றார்கள்.

“ஏன்ரா நான் உங்களுக்கு என்ன செய்தேன். உங்களைப்போல நானும் ஓர் தொழிலாளி தானேடா. ஏன்ரா என்னை எதிரிபோலப் பார்க்கிறியள்.” என்று கத்தினேன். நான் சொல்வதை மற்றவர்கள் ஏற்பதுபோல் முகத்தை வைத்திருந்தனர். யாராலும் என் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை.

“நாங்கள் எல்லோரும் சமமானவர்கள். நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து வேலை செய்வது தானே நல்லம்..” என்று நான் சொல்லச் சொல்ல அவர்கள் நான் கூறுவதை செவிமடுக்க ஆரம்பித்தனர். இது என் மனதுக்குள் சந்தோசத்தைக் கொடுத்தது.

கோபத்தில் உப்புக் குவியல் மேல் பாய்ந்து அதற்குள் என் தலையைப் புதைத்தேன். எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியவில்லை. நான் எழும்பியபோது அங்கு

யாரும் இருக்கவில்லை.

வேலை நேரம் முடிந்திருந்தது. அப்படியே அங்கு இருந்தேன்.

கடல் காற்று மெல்லிய குளிரோடு என்னைத் தடவிச் சென்றது.ஒரு சிறிய முகிற் கூட்டம் வானத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. திடீரென்று அதன் ஒரு பகுதி நீலவானத்தோடு கலந்து கொண்டது.

அந்த இடம் அமைதியாக இருந்தது.எழும்பி காரியாலயப் பகுதிக்குச் சென்று அறிவித்துவிட்டு அவ்விடத்தைவிட்டு விலகி என் பழைய மீன் வாடிக்குச் செல்வதென்ற தீர்மானத்தோடு சென்றேன்.

அப்போது உக்கிரேனியனும் மாதவீயும் இன்னும் மூன்று தொழிலாளர்களும் என்னை நோக்கிவந்தார்கள்.

நான் அவர்களைப் பார்த்தேன்.

"நாங்கள் உன்னுடைய முடிவைத் தடுக்கவில்லை. நீ போவதுதான் நல்லது. ஆனால் போகும்போது நாங்கள் எல்லோரும் சேர்ந்து சேர்த்த இந்தப் பணத்தை உன்னோடு எடுத்துச் செல்" என்று மற்வீ சொன்னான்.

சில செப்பு நாணயங்கள் அவன் கையிலிருந்தன.

நான் சிறிது பின்னுக்கு நகர்ந்து அவர்களை முறாய்த்துப் பார்த்தேன். அவர்கள் தலையைக் குனிந்தபடி தவறினை உணர்ந்தவர்கள் போல் என்முன் நின்றிருந்தார்கள்.

நான் அவர்களைப் பார்த்து

"நான் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டேன்" என்று மாற்வீயின் கரத்தைத் தள்ளிவிட்டேன்.

"எங்களை எதிரிபோல் பாராதை. நாங்கள் உண்மையில் அந்தளவுக்குக் கூடாதவர்களில்லை.உன்னுடைய உணர்வுகளைப் பாதிக்கிறமாதிரி நாங்கள் நடந்துவிட்டோம் என்பது எங்களுக்குப் புரிகிறது. ஆனால் இந்த எங்களின் நடத்தைகளுக்காக எங்களைக் குற்றம் சாட்ட முடியாது. நாங்கள் வாழுகின்ற வாழ்க்கைதான் இதற்கெல்லாம் குற்றம் சாட்டவேண்டும். நாங்கள் எப்படியான வாழ்க்கை வாழ்கிறோமென்று உனக்குத் தெரியுமா? நாங்கள் ஒரு நாய் வாழ்க்கை வாழிறம். வெறும் 50 கொப்பெக்குக்காக முதுகு சூரிய ஒளியால் கொதிக்க அந்த பாரமான தள்ளு வண்டிலை முழு நாளும் இழுக்கிறம். இது காணாதா ஒரு மனிசன் மிருகமாக மாற.! வேலை..வேலை..வேலை..பகல் முழுக்க வதங்கி இரவிலை உழைச்ச காசை குடிச்சு அழிச்சுப்போட்டு காலைமை எழும்பி திரும்பவும் வேலைக்குப் போறம்.

இதுதான் எங்கடை வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும். நீயும் எங்களைப்போல ஐஞ்சு வருசம் வேலை செய்தியெண்டால் மனிசத் தன்மை எல்லாம் இழந்து மிருகமாகத்தான் மாறுவாய்.

உனக்குத் தெரியாது நாங்கள் எங்களுக்குள்ளை செய்யிற மிருகத்தனமான வேலைகளை. அவையள் உனக்குச் செய்தவையைவிட மோசமானவை. நீ எங்களுக்குப் புதியவன். நாங்கள் ஏன் உன்னோடை நல்லாய்ப் பழகவேணும். இப்போ கொஞ்சம் முந்தி நீ சத்தம் போடேக்கை கேள்விகள் கேட்டாயே- அவை உண்மை. ஆனால் எங்களாலை அப்பிடி விரும்பினாலும் வாழேலாது.அதற்காக எங்களுக்கு இதயம் இல்லையென்று நினைக்காதை. எங்களைப் பொறுத்தவரை நீ நல்லவன். உனக்கு இந்த இடம் சரிவராது. உன் வழியிலை நீ இங்கையிருந்து போயிடு. இந்தச் சிறிய தொகையை எடுத்துக் கொண்டு போயிடு

நாங்கள் உனக்கு எதுவும் செய்யவில்லை அதே நேரம் நீயும் எதுவும் செய்யேல்லை. நல்ல விடயங்கள் கூடாததாய் மாறியிட்டுது. எங்களிடமிருந்து வேற என்னத்தை நீ எதிர் பார்க்கலாம். நீ இங்கை இருக்கிறது நல்லதில்லை.நீ எங்களைப் போல இல்லை. நீ நல்லவன். இங்கையிருந்தால் எங்களைப்போலக் கெட்டவனாய் மாறிடுவாய். ஆகவே நீ போயிடு" என்று மற்வீ கூறி முடித்தான்.

நான் அவர்கள் எல்லாரையும் ஒரு தடவை பார்த்தேன். எல்லோரும் மற்வீ சொல்வதை ஆமோதிப்பதுபோல் நின்றிருந்தனர்.

அப்போது உக்கிரேனியன் என் தோளில் கை போட்டபடி என்னையும் சில வார்த்தைகள் கூற விடுங்கள்.

"இன்று நீ இல்லாமல் வேறு ஒருவராக இருந்தால் முகத்திலே ஒரு குத்துக் குத்தி ஞாபகார்த்தப் பரிசு கொடுத்து அனுப்பி இருப்போம். அதற்காக எங்களுக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்படு"

கடைசியில் நான் எதுவும் சொல்லவில்லை. திரும்பப் போகத் தீர்மானித்தேன்.

நான் வந்தமாதிரி அதே பாதையில் கடற்கரையோரமாக அதன் இயற்கை அழகை ரசித்தபடி மீன்வாடியை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். தொழிலாளர்களின் வாழ்க்கையை நினைத்து மனதிற்குள் துன்பப்பட்டவாறு சென்று கொண்டிருந்தேன்.


நான் மீன்வாடியை அடைந்தபோது நண்பன் என்னைப்பார்த்து "என்ன வந்து விட்டாயா. எனக்குத் தெரியும் உனக்கு அது சரிப்பட்டு வராது என்று. வா.. போய் தேநீர் போட்டுக் குடி" என்று கூறிவிட்டு அவன் வள்ளத்தைக் கடலுக்குள் தள்ளி மீன் பிடிக்கச் சென்று கொண்டிருந்தான். நான் அவனையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன்.

*Poem written by Nichanor parra*
*translated by Miller Williams*
**தமிழில்..மதுரா**




நான் செல்வதற்கு முன்
நான் கூறிய எல்லாவற்றையும் திரும்பப் பெறுகிறேன்..
இது என்னுடைய கடைசி ஆசையாக
இருக்கட்டும்.
தயாள வாசகரே
இந்நூலை எரித்து விடுங்கள்.
என் குருதியில் எழுதப்பட்டிருந்தாலும்
நான் கூற விரும்பியது இது அல்ல.
என் சோகத்தை விட அதிகமானதாக
நான் சொல்ல விரும்பியதல்ல.
என் நிழலாலே நான் தோற்கடிக்கப்பட்டேன்.
என் சொற்களே என்னை பழிதீர்த்து
விட்டன.
மன்னித்துவிடுங்கள் வாசகரே
இனிய வாசகரே
என்னால் விலக முடியாவிட்டாலும்..
ஒரு கதகதப்பான அணைப்போடு
உங்களைவிட்டு விலகுகிறேன்..
வலுக்கட்டாயமான சோக புன்னகையுடனும்..
நான் அவ்வளவு தான் போலும்..
ஆனாலும் என்னுடைய கடைசி
வார்த்தையைக் கேளுங்கள்
நான் கூறிய எல்லாவற்றையும் திரும்பப் பெறுகிறேன்..
உலகில் மிக மிக கசப்புணர்வோடு
நான் கூறிய எல்லாவற்றையும்
திரும்பப் பெறுகிறேன்..

தெலுங்கு மூலம் : எம் எஸ். சூர்யநாராயணா
தமிழாக்கம் : சாந்தா தத்



# சிதம்பரக் கனவு

*2010.. ஜனவரி10....விடியற்காலை....* நடுத்தர வர்க்க சிதம்பரத்துக்கு பருப்புச் சோறு சாப்பிடுவது போல் கனவு வந்தது

*"எங்களுக்கெல்லாம் பருப்பு சோறு போடமாட்டியா....எப்ப கல்யாணம் செஞ்சுக்கப் போற?..' ஒரு சமயம் அதாவது அவனின் இருபத்தியிரண்டாம் வயதில் உறவுக்காரர்களெல்லாம் கேட்ட வகையிலான பருப்புச் சோறல்ல அது. ..! அன்றாடச் சாப்பாட்டில்.. ஆவி பறக்க மாங்காய் போட்டு செய்த பருப்பு சோறு...விரல் பொசுங்குமளவு சூட்டையும் பொறுட்படுத்தாது தாராளமாய் நெய் விட்டு பெரிய எவர்சில்வர் தட்டில் பிசைந்து கொண்டிருக்கிறான்!..தனியாக அல்ல.... மனைவி..இரு பிள்ளைகளுடன்....ஆறி விடப் போகிறதே எனும் பதைப்புடன் அள்ளி அள்ளி வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்த போது.....*

*அப் பரவசக் கணங்களிலிட மேலிருந்து கருப்பாய் கனமாய் ஏதோ ஒரு வஸ்து அவர்கள் மீது தொபீரென. விழ..அவர்கள் தலை புடைத்துக் கொண்டதோடில்லை....பருப்புச் சோறு நாலா பக்கமும்சிதறி விழுந்தது.!*

*அவ் வலியில் உறக்கம் கலைந்து போனது சில நொடிகள் ஒன்றுமே புரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து தான் நினைவு வந்தது அவனுக்கு தான் கண்ட அழகான கனவு. ஆனால் தங்கள் மேல்விழுந்த அந்தப் பொருள் என்னவென மட்டும் தெளிவாகவில்லை.!. நான்கு மணி என்றது கடிகாரம்..விடியற்காலை வரும் கனவு பலிக்குமென்பார்களே..... ஒரு வேளை..இந்த வருடம் தன் கனவு நனவாகப் போகிறதோ என்னவோ..-- !..தன்னுள் முனகிக் கொண்டான். இதோ சங்கராந்தி வந்திட்டிருக்கே அப்போதா.... இல்லை உகாதி சமயத்திலா....மிஞ்சிப் போனால் விநாயக சதுர்த்தியா....?.. பண்டிகைகள் வரிசை கட்டின அவன் மனதில்!*

*நான்கு. தினங்களில் சங்கராந்தி அவனைக் கடந்து போனது.!.. அவனுடைய பருப்புச் சோறு கனவும் அப்படியே மிச்சமாகிப் போனது.!*

◎

*2010..ஜனவரி11...கனவுகள் வராத காலைப் பொழுது..! காப்பியென்றால் சிதம்பரத்துக்கு உயிர்..விடிவது தான் தாமதம். அனல் கக்கும் காப்பி தொண்டைக்குள் இறங்கியாக வேண்டும்.. நெருப்புத் துண்டங்கள் நிரம்பியது போன்ற காப்பி தம்ளரை அவனிடன் நீட்டினாள் மனைவி சேஷரத்னம். முதல் மிடறு வாய்க்குள் இறங்கிய வினாடி வாயெங்கும் ஒரு கசப்பு பரவீயது*

*" சேஷூ.....!"- அக் கூச்சலில் மிரண்டு போன சேஷரத்னம் பதற்றத்துடன் ஓடி வந்தாள்.*

*"காப்பியில் விஷம் கலந்திருக்கயாடி..?"...நாவைச் சுழற்றியபடி கோபமாய் கேட்டான்.*

*"..ஐயோ...சர்க்கரை பத்தலயா..ஒரு சிட்டிகை போட்டேனே...? இருங்க .." அவன் பதிலுக்குக் காத்திராமல் சரேலென உள்ளே சென்று அதே வேகத்தில்.*

ஆள் காட்டி விரல் நுனியில் சிட்டிகைச் சர்க்கரையுடன் வந்து தம்ளரில் போட்டு விரலாலேயே கலக்கினாள்.

இப்போது சிதம்பரம் காப்பியைஒரு மிடறு வாயில் இறக்கினானோ இல்லையோ.. அவன் நா இறுகித் தொண்டையில் ஒட்டிக் கொண்டது.!

....” தண்ணி வேணும்..”..வலது கை கட்டை விரலால் சைகை செய்தான்..உள்ளே சென்று தண்ணீர்ர் கொண்டு வந்து புருஷனிடம் கொடுத்தாள் சேஷரத்னம்.

தண்ணீர் குடித்ததும் சற்று நேரத்தில் இயல்பு நிலைக்கு வந்த சிதம்பரம்....

“..சேஷூ.. உண்மையையச் சொல். காப்பியில் சர்க்கரை போட்டயா இல்ல சயனைட் மாத்திரை கலந்தியா...?”..அமைதியாய் கேட்டான்.

“..ஐயோ.என்னங்க இப்படியெல்லாம் பேசறீங்க....போன மாசம் தானே நம்ம பையன்..முப்பது கிராம் சர்க்கரை....சிட்டிகை கடலமாவு....நூறு கிராம் எண்ணெயெல்லாம் வாங்கிட்டு வந்தான்......” மளிகைப் பட்டியலை மளமளவெண ஒப்பிக்கலானாள் சேஷு.

.. ..” நானும் பிள்ளைங்களும் இனிப்பை நிறுத்திட்டோம்.. தெனமும் காப்பியில் உங்களுக்குமட்டும் ஆசை ஆசையா சிட்டிகை சர்க்கரை கலந்தா நீங்க விஷம் அது இதுன்னு.....உங்களுக்கே நியாயமாப் படுதா இது.”..கண்ணையும் மூக்கையும் கசக்கிக் கொண்டாள் அவள்.. மறு பேச்சின்றி மூக்கைப் பொத்திக் கொண்டு காப்பியை விழுங்கி விட்டு சொம்பு நீரைக் கடகடவெனக் குடித்தான்.

அந்த சீன் முழுவதும்ம் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கருப்பு வஸ்து பகபகவென்ச் சிரித்தது.

◎

இதே 2010ல் ஒரு விடியற்காலை நேரம்..சரியாக நான்கு.மணி ஒரு நிமிடம்.. சிதம்பரத்தின் கனவு ஆரம்பமாயிற்று.! உழவர் சந்தையில் அவன்....! இப்போதெல்லாம் காய்கறி வகைகளை அகன்ற தட்டுகளிலும் கூடைகளிலும் வைப்பதில்லை. பளபளக்கும் கண்ணாடிக் கதவுகளுடன் “ஷோ ரூம்”கள் வித விதமாய்! உதாரணமாய் வெங்காயத்துக்கென்றேயான தனிப் பிரிவில் ஒவ்வொரு வெங்காயத்தையும் ஒவ்வொரு வைரம் போல் அடுக்கியிருந்தார்கள்! பத்தாயிரம்..அதாவது அவன் மாதச் சம்பளத்தில் பாதி கொடுத்து இருப்பதிலேயே ஒரு பெரிய வெங்காய வைரத்தைத் தேர்ந்தெடுத்தான். கடைக்காரர் அதை வெகு ஜாக்கிரதையாய் சிறு தாரசில் வைத்து எழுபத்தைந்து கிராம் என்றார். அரை கிராம் கூடுதலாக இருந்ததால் இன்னும் ஆயிரத்தைந்நூறு கூடுதலாய் விலை கட்டி பத்தாயிரத்து எழுநூற்றி ஐம்பது ரூபாய் பில்லைநீட்டினார்..

அவ் வெங்காயத்தை ஆத்ம லிங்கம் பொல் வெகு ஜாக்கிரதையாய் இரு கைகளால்

*இறுகப் பற்றிக் கொண்டு வீடு திரும்பிய சிதம்பரம் காணாது கண்ட மா மணியைப் போல் அதை மனைவி முன் காட்சிப் படுத்தினான். அவ்வளவு தான்..மயங்கிச் சரிந்து விட்டாள் சேஷரத்னம். சில நிமிடங்களில் அவள் தெளிவடைந்து எழுந்து உட்கார்ந்ததும் ஒரு அகன்ற பாத்திரத்தில் அந்த வெங்காய வைரத்தை வைத்தனர்.. அதை நறுக்கத் தொடங்கு முன்பே இருவர் கண்களின்றும் தரை தாரையாய் நீர்...!*

*அதை உரிக்காமலே பத்துத் துண்டங்களாய் நறுக்கி ஒரு நாள் ஒரு துண்டை வைத்து உப்புமா..அடுத்த நாள் சாம்பார்...இன்னொரு நாள் கத்தரிக்காய் காரப் பொரியல்..இப்படி பத்து நாட்களுக்கான திட்டம் தயாரானது.*

*சிதம்பரம் போன்ற ஒரு நடுத்தர மனிதன் குடும்பச் சகிதம் உணவில் வெங்காயம் சேர்ப்பது அக் காலனியில் காட்டுத் தீ வேகத்தில் பரவ..இதை. ஒரு அபூரவ அதிசயமாய் பாவித்த காலனிக்காரர்கள் ஒரு மாலை வேளையில் சபை கூட்டி அவர்களை கௌரவிக்கத் தீர்மானித்தனர்.*

*அதன்படி அன்று இருவருக்கும் சேர்த்து ஒரே மாலை அணிவிக்க கரவொலியில் காலனியே அதிர்ந்தது. அம் மகிழ்ச்சி சில நிமிடங்கள் கூட நீடிக்கவில்லை.. திடீரென இருவரும் ஒரே நேரத்தில் கீழே விழுந்து விட்டனர்..1*

*அவர்கள் மேல் தொபீலென விழுந்திருந்த அக் கருப்பு வஸ்து சரமாரியாய் குத்துகள் விடத் தொடங்க.. அவர்கள் உடல்கள் ரண களமாகி வலியால் வாய் விட்டுக் கதற ....சரேலென விழிப்பு வந்து விட்டது சிதம்பரத்துக்கு.! அப்போது விடியற்காலை 4.20..! விடியற்காலைக் கனவுகள் கண்டிப்பாக பலிக்குமே....அக் குத்துகள்..அந்த வலி கூடவா....ஐயோ.. ஆனால் அவன் கனவுகளெல்லாமே இப்படித் தான் சரியாய் கிளைமாக்ஸ் சமயத்தில் கலைந்து போவது தான் நம்பவியலா விந்தையாக இருந்தது அவனுக்கு..! அத்தனையும் ஆனந்தமாய் துவங்கி அவலமாய் முடிவதுமாய்...நினைக்க நினைக்கப் பெரும் புதிராய்...அதிர்ச்சியாய். விசித்திரமாய்..! ஒரு பெரிய கருப்பு வஸ்து மேலே விழுந்து அவனை மொத்தமாய் ஆக்கிரமித்துத் துவம்சம் செய்கிறது. அது என்ன.. என்ன அது..? சிதம்பரத்துக்கு தூக்கம் அண்டவில்லை. காரிருள் போன்ற அஃது என்ன..? எங்கிருந்து வருகிறது? குடும்பத்துடன் வயிறு நிறைய திருப்தியாய் பருப்புச் சோறு சாப்பிடும் யோகம் கனவில் கூடக் கை கூடாதா..? என்ன இந்த அட்டூழியம்..!*

*ஒரு மணி அரிசி..ஒரு துவரம்பருப்பு..ஓரே ஒரு கோதுமை..ஒரு சர்க்கரைத் துகள்...ஒரு காய்கறித் துண்டு....!..இவையெல்லாம் எப்போது கனவுக்குள் இடம் பெயர்ந்தன..? பசியுடன் படுத்து பசி தீர்ந்தாற் போல் கனவு கண்டால் அக் கனவைக் கூட மிரட்டி விரட்டியடிக்கும் அந்த மிஸ்டர் பிளாக் யார்? கண்ணாடிப் பாத்திரமாய் கீழே விழுந்து சுக்கல் சுக்கலான கனவுத் துகள்களைப் பொறுக்கிக் கொண்டான்*

சிதம்பரம்!

◎

அதே 2010..

கனவுக்கும் நனவுக்குமிடையான நிலையில் சிதம்பரம்..!

அன்று.. அரசின் வருடாந்திர பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது. அதிர்ச்சியால் கவலையால் நிலைகுலைந்து போனான் சிதம்பரம். அசல் இந்த பட்ஜெட் எதிரொலிப்பது என்ன..?..சில சலுகைகள்..விதி விலக்குகளுடன் பொருளாதார நிலவரத்தை மக்களுக்கு எளிதாக்குவது அல்லது கடினமாக்குவது.. இதுவா..அதுவா.. .எந்த அம்சம்..எது.? இச் சிதம்பர ரகசியத்தின் சிக்கு முடியைப் புரிந்து கொள்ள தலை கீழாய் தன்னைத் தானே பூமிக்குள் புதைத்துக் கொண்டு.. .. கொண்டு.. ..

.பளீரென முளை விட்ட..ஒரு உறுதியான முடிவுக்கு வந்தவன்.. "விஸ்வேஸ்வர் சாஃப்ட்வேர் அண்ட் ஹார்ட்வேர்" கம்பெனிக்கு ஃபோன் செய்தான்..

'.. ..குத்து மதிப்பா உங்களிடம் இப்ப எவ்வளவு ஸ்டாக் இருக்கும்?'.

" எத்தனை கோடவுன்.. வேணும் உங்களுக்கு..?.."..  கேள்வியாய் பதில் கிடைத்தது..

செவியைப் பிடுங்கிக் கொண்டு கணம் தாமதியாது இரு சக்கர வாகனத்தைக் கிளப்பி.. ..வழியில் லாரி ஏஜெண்டை அணுக..அவனுக்கு முன்பே அங்கு சேர்ந்து விட்டிருந்தது ஒரு லாரி..

'உங்களுக்கு எவ்வளவு வேணுமோ எடுத்துச் செல்லுங்க. '..கோடவுன் சாவிக் கொத்தை அவனிடன் நீட்டினார்கள் விஸ்வேஸ்வர் கம்பெனிக்காரர்கள்.. அரை மணி நேரத்தில் லாரி நிறைந்த ஹார்ட்வேர் சங்கதிகள் அவன் வீட்டையடைந்தன..

.." அம்மாடியோவ்..இதெல்லாம் என்னங்க..?'.ஆச்சரியமாய் கேட்டாள் சேஷுரத்னம்.

"..சொல்றேன் சொல்றேன். முதல்ல இந்த லோடெல்லாம் பரண் மேல் ஏத்தணும்.."

மறு பேச்சின்றி அவனுக்கு உதவலானாள் சேஷு. அந்த வேலை முடிந்த பின் டீ குடித்தவாறு அவளிடம் தன் " ஐடியா"வை விவரித்தான் சிதம்பரம்..

"..ஆமாங்க. அற்புதமான ஒரு ஆலோசனை வாழ்க்கையை அப்படியே மாத்திடுன்னு பெரியவங்க யாரோ சொல்லியிருக்காங்கில்ல.. அதைத் தான் நாம் இப்ப செய்யப் போறோம்..'--- உற்சாகமாய் நடனமாடத் தொடங்கினார்கள் இருவரும்!.

.. ..பட்ஜெட் கருணித்த அற்புத வரத்தைத் துல்லியமாய் புரிந்து கொண்டு அதை அப்படியே பயன் படுத்திக் கொண்ட இத் தலைமுறையின் உதாரண புருஷர்களானார்கள் சிதம்பரம் தம்பதியர்.! சிதம்பர ரகசியம் என்பதன் ஆழ் நுணுக்கம் அவர்களுக்கு நன்கு வசமாகி விட்டது! எப்படி என்கிறீர்களா..? கேளுங்க.. தெரிஞ்சுக்கங்க .பின் பற்றுங்க..

( பின் வந்த நாட்களில் சிதம்பரத்துக்கும் அவன் மனைவிக்குமிடை அடிக்கடி நடக்கும் செவி வழி உரையாடல்.. இது )

..”..ஹலோ சேஷூ.. . என்ன பொரியல் இன்னிக்கி.?”

“கம்ப்யூட்டர் காரப் பொரியலுங்க..”

“ கொத்தமல்லிக் காரம் தானே..?’

“ கொத்தமல்லிக்காரம்னா உங்களுக்கு உசிருன்னு எனக்குத் தெரியுமில்லே..”

“..ஓகே.. ..வேற என்ன..?”

“..கீ போர்ட் துண்டங்கள் போட்ட குழம்பு..”

“..குழம்பை விட சாம்பார் நல்லா இருக்குமே சேஷு..”

“..சரி.. சாம்பாரே செஞ்சுட்டா போச்சு.. .. ஃப்ளாப்பிகளை சிப்ஸ் போல் பொரிக்கட்டுமா?”

“..ஆஹா.. .உன் ஐடியா நல்லா இருக்கே..!”

“ வாழ்க்கையையே மாத்திட்டதில்லையா.. .!”.. சிரித்தது.அவள் குரல்..

◎

சொல்லி வைத்தாற் போல் பிரவேசித்தது கருப்பு வஸ்து.!...உச்சியினின்று உள்ளங்கால் வரை கரித் துண்டு போன்ற கருப்பு.! கனவுச் சில்லுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த சிதம்பரத்தைப் பார்த்து அட்டகாசமாய் சிரிக்கத் தொடங்கியது. அப்படியே வெலவெலத்து போனான் சிதம்பரம்..உடம்பெல்லாம் நடுக்கம் பரவ.. ..சர்க்கரை அளவு குறைந்து விட்டாற் போல் ஒரு சோர்வு.. .

உடம்பில் பருப்புத் தினுசுகள் சேர்க்கும் திசுக்கள் எப்போதோ மாயமாகி வீட்டிருந்தன. அன்னையைப் போல் பேணும் வெங்காயம்..பூண்டுச் சத்துக்களும் கண்ணால் காண்பதற்கே பஞ்சமாகி விட்டிருந்தன.!

”.. யார் நீ?”

சிதம்பரத்தின் கேள்விக்குப் கிடைத்த பதில்.அண்டம் அதிரும் அதன் இடிச்

சிரிப்பு.தான்! நாடி நரம்புகளெல்லாம் ஒடுங்கிப் போன சிதம்பரத்துக்குக் கண்கள் இருட்டிக் ஒண்டு வந்தன. மிகுந்த சிரமத்துடன் சாமாளித்துக் கொண்டு.. .. ....

".. யார் நீ .. உனக்கு என்ன தான் வேணும்..? என் கனவுகளில் கூட விடாமல் துரத்தி எதுக்கு இப்படி இம்சிக்க்றே..?".. கோபத்துடன் கத்தினான்.. எகிறி எகிறிக் குதித்தபடி வாய் விட்டுச். சிரித்தது அது..அச் சிரிப்பின் முனைப்பில் அகலமாய் வாய் திறந்த போது அதனுள் ஒரு பெரிய இருட்டுக் கிடங்கு தென்பட்டது. கண்களைக் கசக்கிக் கொண்டு சிதம்பரம் உற்றுப் பார்த்து..பின்.. கரும் பூதம் போல் வாய் திறந்திருந்த அக் காரிருளுக்குள் சரேலெனப் பாய்ந்தான்.. பின் தொண்டை கிழியக் கூச்சல் போட்டான்.. இதோ.. இங்கு தான் இறுகிப் புதைந்து போய் வீட்டன என் கனவுகள்.. இந்த இருட்டுக் கிடங்குக்குள்ளதான் முனகிக் கொண்டு கிடக்கின்றன.. குமுறிக் கொண்டிருக்கின்றன மௌன ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றன. .. ."---

நாற்று நட்டவர்கள்.. .. எனைப் பெற்றவர்கள்

நீர் பாய்ச்சியவர்கள்.. .. எனைப் வளர்த்தவர்கள்

உரிமையாளர்களுக்குத் தொலைவாய்

காரிருள் வெளி கொண்டு சேர்த்தனர்

உழும் கலப்பையில்.. எனைப் பெற்ற தாயே

பாவக் காரியங்களில்..உழன்று கிடக்கிறேனம்மா.. .

அவன் வெகுவாய் ரசிக்கும் கவிஞர் சத்யஸ்ரீமன்நாராயணா கவிதை வரிகளை ஒரு எழுத்து விடாமல் நரம்புகள் அறுந்து போகும் உக்கிரத்துடன் உரக்கக் கத்தி.. ..அரற்றினான் சிதம்பரம்.. வீடே அதிர்ந்து விழும் போன்ற அப் பேரிரைச்சலில் விழித்துக் கொண்ட மனைவியும் பிள்ளைகளும் அலறியடித்தபடி ஓடி வந்தனர்.. அவனை ஆசுவாசமாக நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு தண்ணீர் குடிக்கச் செய்தாள் சேஷரத்னம்.. சற்று நேரத்தில் சுதாரித்துக் கொண்ட சிதம்பரம் மீண்டும் உறக்கத்திலாழ்ந்தான்.

விடியற்காலை நான்கு முப்பது.. இப்போது ஒரு புதுக் கனவுக்குள் சிதம்பரம்.. இம் முறை அது பசிக் கனவல்ல!. அவன் கனவில் பருப்புச் சோறு வரவில்லை. சர்க்கரைத் துணுக்குகள் வரவிலை.. . கோதுமை மணி வரவில்லை. ஹார்ட்வேரும் வரவில்லை.. அவ் விடியலில் அவனுக்கு வந்தது நெருப்புக் கனவு..! அவன் கனவுளைக் கூட நாசமாக்கிக் கொண்டிருந்த அந்த மாயக்கார வஞ்சக இருள் வஸ்துவைக் கால் கீழ் போட்டு அழுத்தி வைத்து அதற்குத் தீ வைத்தான்..! சில விநாடிகளிலேயே கருப்பு மனிதன் போன்ற அது.. ..." ப்ளாக் ஹோல் " போன்ற அந்த இருட்டுப் பிசாசு கண் முன்னாலேயே பொசுங்கிப் போனது.. ..

ஆங்கிலத்தில்: *ÕThings you didnÕt do!Õ*
தமிழில்: க. நவம்
நன்றி : *Leo Buscaglia*



# நீ செய்யாத செயல்கள்!

*நினைவிருக்கிறதா,*
*உனது புத்தம்புதுக் காரை இரவல்வாங்கி*
*நான் சேதப்படுத்திய நாள்?*
*நான் நினைத்தேன்*
*என்னை நீ கொல்லப்போகிறாயென்று.*
*ஆனால் நீ என்னைக் கொல்லவில்லை!*

*நினைவிருக்கிறதா,*
*கடற்கரைக்கு நான் உன்னை*
*இழுத்துச்சென்ற தருணம்,*
*"இன்று மழைபெய்யும்" என்றாய் நீ,*
*மழை பெய்தது?*
*"நான் சொன்னேனே" எனச் சொல்வாயென*
*நான் நினைத்தேன்.*
*ஆனால் நீ சொல்லவில்லை!*

*நினைவிருக்கிறதா,*
*உனக்குப் பொறாமையூட்டடவென*
*பையன்கள் எல்லோருடனும் நான்*
*உல்லாசமாக ஊர்சுற்றித் திரிந்ததும்*
*நீ பொறாமைப்பட்டதும்?*
*நீ என்னை விட்டுச் செல்வாயென*
*நான் நினைத்தேன்.*
*ஆனால் நீ என்னை விட்டுச் செல்லவில்லை!*

*நினைவிருக்கிறதா,*
*உனது கார்த் தரைவிரிப்பெங்கும்*
*நான் ஸ்றோபெரி பை கொட்டியது?*
*நீ என்னைத் தாக்குவாயென*
*நான் நினைத்தேன்.*
*ஆனால் நீ என்னைத் தாக்கவில்லை!*

*நினைவிருக்கிறதா*
*அது முறைசார் நடனம் என்பதை*
*நான் சொல்ல மறந்ததும்*
*நீ ஜீன்ஸுடன் வந்திருந்ததும்?*
*நீ என்னைக் கைவிடுவாயென*
*நான் நினைத்தேன்.*
*ஆனால் நீ என்னைக் கைவிடவில்லை!*

*ஆமாம்,*
*எனக்கு நீ செய்யாத செயல்களென*
*எராளம் இருந்தன.*
*ஆனால் நீ*
*என்னுடன் இணைந்திருந்தாய்,*
*என்னை நேசித்தாய்,*
*என்னைப் பாதுகாத்தாய்!*

*ஈடுசெய்யவென நான்*
*எண்ணியிருந்தவை ஏராளம் -*
*வியட்நாம் போரிலிருந்து*
*நீ திரும்பி வந்தபின்னர்,*

*ஆனால் நீ திரும்பி வரவேயில்லை!*

மஹ்மூத் தர்வீஷ் (பாலஸ்தீனம்)
தமிழில் : பெரி. சண்முகநாதன்



# விசாரணை

*எழுதிக்கொள் நானொரு
அரபு மகன் ! - என்
அட்டையின் இலக்கம் 50,000
எட்டுப் பிள்ளைகள் எனக்கு.
வருங்கோடையில்
இன்னொன்றும் வந்துவிடும்!
கோபம் வருகிறதா உனக்கு ?*

*எழுதிக்கொள் நானொரு
அரபு மகன் !
ரொட்டித் துண்டு
ஒன்றுக்காய் - ஆம்
ரொட்டித்துண்டு ஒன்றுக்காய்,
எட்டுப் பிள்ளைகளும்
ஏடுகற்க நூல்வாங்க
பட்டப் பகலில்
பாட்டாளித் தோழருடன்
கல்லுடைக்கின்றேன்.*



கடும்பாறை தனையெனது
கையால் பிழிகின்றேன்.
ஆனால்
உன்னதி காரங்கண்டு
உடல் குறுக மாட்டேன் !
என்பசி தீர்க்கவென
இரந்துண்ண மாட்டேன் !
கோபம் வருகிறதா உனக்கு ?

எழுதிக்கொள் நானொரு
அரபு மகன் !
பித்தலாட்ட உலகொன்றில்
பட்டமில்லா நபர் நான்.
காலநேரங் களுக்கப்பால்
ஆழப் பதிந்தவை என்
ஆணிவேர்கள் !
எளிய
விவசாயக் குடும்பத்தின்
உழவுக் கொழுவின்
உத்தம புத்திரன் நான்!
குச்சி கொறுக்காலான
குடிசையொன்றில்
வாழ்பவன் நான் !

என் மயிர்கள்
கரு நிறத்தவை
என் கண்கள்
மண் நிறத்தவை
கோதுங் கைகளையென்
குல்லா சிராய்க்கிறது
தைலம் , எண்ணை சிறிது
தடவினால் நல்லதுதான்.

எல்லாவற்றுக்கும் முதலாக
இதனை எழுதிக்கொள்
யாரையும் நான்
வெறுக்கவில்லை நீ ஆனால்
கும்பி கொதிக்கும் வேளையில்
எனைக் கொள்ளையிடுவோர்
இறைச்சியையே
குதறித் தின்பேன் !
ஜாக்கிரதை !
என்
கும்பிக் கொதிப்பையிட்டு
என்
கோபாவேசந் தனையிட்டு
ஜாக்கிரதையாய் இரு !